மல்கியா 4:2
யோவான் 17:17
நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்


# புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 111* *மே 2025*

## கிரீடத்தை இழந்தவர்களிலுள்ள தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவி

*PT# 363, March 1949, pp. 34-48*





*1.* **ப**ரிசுத்த ஆவியைப் பற்றிய நம்முடைய ஆராய்வில் நாம் இதுவரை பின்வரும் காரியங்களைப் பார்த்திருக்கிறோம்: *(1)* பரிசுத்த ஆவி என்பது ஒரு நபரல்ல, *(2)* அது தேவனுடைய வல்லமையாகும், *(3)* அது முதன்மையாகத் தேவனிலுள்ள அவருடைய மனஇயல்பாகவும், இரண்டாம் நிலையில் கர்த்தராகிய யெஷுஆவிலுள்ள தேவனுடைய மன இயல்பாகவும், மூன்றாம் நிலையில் பரிசுத்தவான்களிலுள்ள தேவனுடைய மன இயல்பாகவும் இருக்கிறது. இப்போது நாம் கிரீடத்தை இழந்தவர்களிலுள்ள பரிசுத்த ஆவியைக் குறித்துப் படிக்க ஆயத்தமாயிருக்கிறோம். அதை நாம் கிரீடத்தை இழந்தவர்களிலுள்ள தேவனுடைய மனஇயல்பு என்று வரையறுக்கலாம். கிரீடத்தை இழந்தவர்களிலுள்ள தேவனுடைய மனஇயல்பு என்பதை நாம் ஐந்து கண்ணோட்டங்களிலிருந்து கருத்தில் கொள்ளக் கூடும்: *(1)* அவர்கள் கிரீடத்தை இழப்பதற்கு முன்பு இன்னும் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருக்கும்போது; *(2)* அவர்கள் ஓரளவிற்கு விசுவாச உண்மைத்துவமில்லாதவர்களாக ஆகும்போது - இதினால் அவர்கள் கிரீடத்தை இழக்கிறார்கள்; *(3)* அவர்கள் மிகவும் விசுவாச உண்மைத்துவமில்லாதவர்களாக இருக்கும்போது; *(4)* அவர்களை மறுபடியும் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக ஆக்கும்படிக்கு அவர்கள் சிட்சிக்கப்படும்போது; *(5)* அதற்குப்பிறகு அவர்கள் தொடர்ந்து விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக நீடித்திருக்கும்போது. சுவிசேஷ யுகம் முழுவதும் ,பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டதென்று வேதாகமம் போதிக்கிறது. அந்த ஆவியைப் பெற்றவர்களில் அநேகர் கிரீடத்தை இழந்து, திரள்கூட்ட அங்கத்தினர்களாக ஆனார்கள்.

### *1.* அவர்கள் இன்னும் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருக்கும்போது அவர்களிலுள்ள பரிசுத்த ஆவி

*2.* பரிசுத்த ஆவி ஊற்றப்படுதலைக் குறிப்பிடும் முக்கியமான வசனம் (யோயே *2:28,29;* அப். *2:17,18)* இதைப் போதிக்கிறது. ஏனென்றால் சுவிசேஷ யுகத்தில் பரிசுத்த ஆவி ஊற்றப்படுவதைக் குறித்து சொல்லும்போது ("ஊழியக்காரருக்காகவும் ஊழியக்காரிகளுக்காக

## தூது நிரல்

1. கிரீடத்தை இழந்தவர்களிலுள்ள தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவி.........................1

2. மாம்ச இஸ்ரயேல் ஆவிக்குரிய இஸ்ரயேலை அடையாளப்படுத்துகிறது................................10

வும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்"), கர்த்தர் அவருடைய பரிசுத்த ஆவியை அவருடைய ஊழியக்காரருக்காக மட்டுமல்ல, அவருடைய ஊழியக்காரிகளுக்காகவும் ஊற்றுகிறார் என்று அவர் நமக்குச் சொல்கிறார். ஊழியக்காரர்கள் என்பது சிறுமந்தை வகுப்பாரையும், ஊழியக்காரிகள் என்பது திரள் கூட்டத்தாரையும் அர்த்தப்படுத்துகிறது. வேதாகம கண்ணோட்டத்தில் ஆண்கள் பெண்களை விட அதிக பலமுள்ளவர்களாகக் குறிப்பிடப்படுகிறார்கள் (1பேது. 3:7). ஆகையால் திரள்கூட்டத்தாரை விட அதிக குணாம்ச பலமுள்ளவர்களான சிறுமந்தை வகுப்பார் வேதாகமத்தில் ஆண்களாகவும், திரள்கூட்டத்தார் பெண்களாகவும் குறிப்பிடப்படுகிறார்கள். ஆகையால் யோயே. 2:29 மற்றும் அப்.2:18 வசனங்களில் சிறுமந்தை வகுப்பார் ஊழியக்காரர்களாகவும், திரள் கூட்டத்தார் ஊழியக்காரிகளாகவும் அழைக்கப்படுகிறார்கள். ஒரு குடும்ப உருவகம் என்ற கண்ணோட்டத்திலிருந்து, சிறுமந்தை வகுப்பார் தேவனுடைய குமாரர்களாகவும், திரள் கூட்டத்தார் தேவனுடைய குமாரத்திகளாகவும் இருக்கிறார்கள் (2கொரி. 6:17,18). இவ்வாறாகப் பரிசுத்த ஆவி ஊற்றப்படுவதைப் பற்றிய இந்த முக்கியமான வசனம், அதைத் தக்க வைத்துக் கொள்கிறவர்கள் இரு வகுப்புகளாக இருப்பார்கள் என்பதைக் காண்பிக்கிறது. அந்த இரு வகுப்புகள் சிறுமந்தை மற்றும் திரள் கூட்டம் என்பவைகளாகும்.

*3.* அவர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படும் போதும், அதற்குக் கொஞ்சங் காலத்திற்குப் பிறகும் கிரீடத்தை இழக்காதவர்களாக இருந்தார்கள். அப்போது எல்லோரும் வருங்காலத்தில் சிறுமந்தை அங்கத்தினர்களாக இருக்கப் போகிறவர்களாக அல்லது பரீட்சார்த்த ரீதியில் சிறுமந்தை அங்கத்தினர்களாக இருந்தார்கள். ஏனென்றால் அவர்கள் எல்லோரும் பரம அழைப்பென்னும் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டவர்களாக இருந்தார்கள் (எபே. 4:4). அதற்குப் பிறகுதான், சிலரின் காரியத்தில் விரைவாகவும், சிலரின் காரியத்தில் தாமதமாகவும், பெரும்பான்மையான புது சிருஷ்டிகள் கிரீடத்தை இழந்தார்கள். சிறுமந்தை மற்றும் திரள்கூட்டம் என்ற பெயர்களே, பெரும்பான்மையோர் கிரீடத்தை இழந்தார்கள் என்பதை அர்த்தப்படுத்துகிறது. கிரீடத்தை இழந்தவர்களில் சிலர் மயிரிழையில் இரண்டாம் மரணத்திலிருந்து தப்பினார்கள், இன்னும் சிலர் மயிரிழையில் சிறுமந்தை வகுப்பாக இருக்கும் நிலையை இழந்தார்கள். இந்த இரு எல்லைகளுக்கிடையில் திரள்கூட்டத்தாரில் எல்லா விதமான குணாம்ச வேறுபாடுகள் காணப்படுகின்றன.

*4.* பிரதிஷ்டை மற்றும் ஆவியினால் ஜெநிப்பித்தலின் காலத்தில் இந்த இரு வகுப்பாரின் இருதய நிலையில் எவ்வித வேறுபாடும் இல்லாதிருந்தது. அவர்கள் எல்லோரும் தங்களுக்குரிய சகலத்தையும் பலிபீடத்தின் மேல் வைத்து முழு பிரதிஷ்டையைச் செய்தார்கள். இதை நாம் நிச்சயமாக அறிகிறோம்: ஏனென்றால் அவர்களுடைய இருதயநிலை அவ்வாறு இல்லாதிருந்தால், தேவன் அவர்களை ஆவியினால் ஜெநிப்பித்திருக்கமாட்டார். ஆகையால் சிறுமந்தை வகுப்பாராக இருக்கும் தகுதியை தக்க வைத்துக் கொண்டவர்களைப் போலவே, கிரீடத்தை இழந்தவர்களும், பிரதிஷ்டை செய்யும்போது, தேவனுடைய சித்தத்தை, தன்னுடைய சித்தமாக கொண்ட புது (புதுப்பிக்கப்பட்ட) மனுஷீக சித்தமுடையவர்களாக இருந்தார்கள். ஆகையால் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படும் போது, சிறுமந்தை வகுப்பார் மற்றும் கிரீடத்தை இழந்தவர்கள் இருவரும் பின்வரும் காரியங்களைப் பெற்றுக் கொண்டார்கள்: (1) அவர்களுடைய உயர்நிலை முதன்மை குணநலன்களில் புதிய, ஆவிக்குரிய சித்தத்தைப் பெற்றுக் கொண்டார்கள், (2) அவர்களுடைய சுயநல மற்றும் சமூக மூளை உறுப்புகளில் புதிய, ஆவிக்குரிய திறன்களை பெற்றுக் கொண்டார்கள், (3) அவர்களுடைய தாழ்நிலை முதன்மை, இரண்டாம்நிலை மற்றும் மூன்றாம் நிலை குணநலன்களில் புதிய, அதாவது ஆவிக்குரிய சாய்வுகளை பெற்றுக் கொண்டார்கள் - இவைகளெல்லாம் ஆவிக்குரிய நோக்கங்களினால் ஆவிக்குரிய வழிகளில் செயல்படக் கூடிய திறமையுடையவைகளாக இருந்தன.

*5.* இவ்வாறாக அவர்கள் அனைவரும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டபோது, அதினால் இந்த வல்லமைகளைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்களில் சிலர் கிறிஸ்துவின் சாயலை நோக்கி இந்த திறன்களை அபிவிருத்தி செய்வதில் பெரிதளவில் முன்னேற்றமடைந்தார்கள். ஆனால் சிலர் வைராக்கியம் இல்லாததினால் மிக குறைவாக மட்டுமே முன்னேற்றமைடைந்தார்கள். இந்த வகுப்பார், அவர்களுடைய கிரீடத்தை இழப்பதற்கு முன்பும் கூட "ஊழியக்காரர்கள்" என்ற வகுப்பைச் சேர்ந்த தனி நபர்களாக கர்த்தருக்கு ஊழியஞ் செய்தார்கள்.ஆனால் “ஊழியக்காரிகள்” என்ற ஒரே வகுப்பாக அவர்கள் அஸாசேலின் கைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகுதான் கர்த்தருக்கு ஊழியஞ் செய்தார்கள். ஏனென்றால் அவர்கள் அஸாசேலின் கைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகுதான் ஊழியக்காரிகளின் வகுப்பாக ஆவார்கள். ஊழியக்காரிகளின் வகுப்பைச் சேர்ந்தவர்களாக கர்த்தருக்கு ஊழியஞ் செய்யும்போது, அவர்கள் கிரீடத்தை இழப்பதற்கு முன் எந்த நிலையிலிருந்து பின்வாங்கிப் போனார்களோ, திரும்ப அந்த நிலைக்கு வந்து, அதற்கு மேலாகவும் அவர்கள் அடையத் தவறின முன்னேற்றத்தையும் வெவ்வேறான அளவுகளில் திரும்ப அடைவார்கள். அவர்கள் எந்தளவில் அந்த முன்னேற்றத்தை அடைவார்கள் என்பது பின்வரும் காரியங்களைச் சார்ந்திருக்கும்: (1) கிரீடத்தை இழப்பதற்கு முன்பு அவர்கள் அடைந்திருந்த முன்னேற்றத்தின் அளவு, (2) கிரீடத்தை இழக்கும் அளவிற்கு அவர்கள் பின்வாங்கிப் போன போது வெளிப்படுத்தின சீர்கேட்டின் அளவு, (3) ஆசாரியக் கூட்டத்தாரை எதிர்த்தபோது அவர்கள் வெளிப்படுத்தின சீர்கேட்டின் அளவு, (4) அதற்கான ஆள் வசமாக அனுப்பப்படும் போதும் அஸாசேலின் கையிலிருந்த போதும் அவர்கள் தவறான செயலில் ஈடுபட்ட போது வெளிப்படுத்தின சீர்கேட்டின் அளவு. அவர்கள் வெவ்வேறான அளவுகளில் முன்னேற்றமடைந்தாலும் அவர்கள் எல்லோரும் முன்னேற்றமடைய வேண்டும். ஏனென்றால் அவர்கள் சுத்திகரிக்கப்பட்ட பிறகு, பரத்துக்குரிய பற்றுதல்கள் மற்றும் குணநலன்கள் எல்லாவற்றையும் (தெய்வீக நிலைக்கு கீழான நிலையில்) அபிவிருத்தி செய்வது மட்டுமல்ல அவைகளெல்லாவற்றையும், அவர்களுடைய புதிய ஆவிக்குரிய சித்தங்களையும்கூட பலப்படுத்தி, சமச்சீர்ப்படுத்தி, படிகப்படுத்த வேண்டும், இவ்வாறாகக் கிரீடத்தை இழந்தவர்கள் இன்னும் கிரீடத்தைத் தக்க வைத்துக் கொண்டவர்களாக இருந்த போது, அவர்களிலுள்ள பரிசுத்த ஆவி என்பது அவர்களிலுள்ள தேவனுடைய மனஇயல்பாக இருந்தது என்பதை நிரூபிக்கிறது. இன்னும் விசேஷமாக அவர்கள் அஸாசேலிடமிருந்து விடுவிக்கப்பட்டு விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக ஆனபோது அது அவர்களிலுள்ள தேவனுடைய மனஇயல்பாக இருந்தது.

*6.* இவ்வாறாக அவர்கள் கொஞ்சங் காலத்

திற்கு அவர்களுடைய பிரதிஷ்டையின் பொருத்தனை களுக்கு விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருந் தார்கள். மேலும் அதின் விளைவாக, அவர்களுடைய சுயநல விருப்பங்களும், மற்றவர்களின் உலக ரிதியான விருப்பங்களும் அவர்களைக் கட்டுப்படுத்த முயன்ற போது, அவர்கள் அவைகளை மறுத்தார்கள். இவ்வா றாகச் சிலர் கொஞ்சங் காலத்திற்கும் மற்றவர்கள் அதிக காலத்திற்கும் சுயவெறுப்பையும் உலக வெறுப்பையும் அப்பியாசித்தார்கள். அது மட்டுமல்ல, சிலர் குறைந்த அளவிலும், சிலர் அதிக அளவிலும், இன்னும் சிலர் இன்னும் அதிகளவிலும் தேவவார்த்தையை அறிந்து கற்றுக் கொள்வதில் முன்னேற்றமடைந்தார்கள். சிலர் இன்னும் அதிகளவிற்குத் தேவ வார்த்தையைக் கற்றுக் கொண்டார்கள் என்பது கொழித்தல்களை உண்டு பண்ணினவர்களின் காரியத்தில் காண்கிறோம். ஏனென் றால் அந்த நிலைக்குச் செல்வதற்கு முன் அவர்கள் தேவ வார்த்தையை அதிகமாகக் கற்றவர்களாக இருந்தார்கள்.

*7.* அவர்கள் தேவ வார்த்தையைப் பரப்புவ திலும் சிலர் அதிகமாகவும், சிலர் குறைவாகவும், சிலர் மிக அதிகமாக அதைச் செய்தார்கள். எடுத்துக்காட்டாகச் சில பில்கிரீம்ஸ், துணை பில்கிரீம்ஸ் மற்றும் மூப்பர்கள் மிக அதிகமாகத் தேவ வார்த்தையைப் பரப்பினார்கள். மேலும் அவர்கள் விழித்திருத்தலை அதின் இரு அம்சங் களிலும், அதாவது சுய பரிசோதனை மற்றும் சுயத்தைக் காத்துக் கொள்ளுதல் என்ற அம்சங்களில் அதை அப்பியாசித்தார்கள். அதிலும் சிலர் அதிகமாகவும், சிலர் குறைவாகவும், சிலர் மிக அதிகமாகவும் செய்தார்கள். அவர்கள் அனைவரும் இதே விதமான வேறுபாடு களுடன், பரத்துக்குரிய பற்றுதல்கள் மற்றும் குணநலத் திலும் அபிவிருத்தியடைவதில் அதிகமாகவோ குறைவா கவோ முன்னேற்றமடைந்தார்கள். சிலர் குணநலன் களைப் பலப்படுத்துவதிலும் சமச்சீர்ப்படுத்துவதிலும்கூட முன்னேற்றமடைந்தார்கள். அவர்களில் சிலர் இதே வித மான வேறுபாடுகளுடன் கர்த்தருக்காகவும், தேவ வார்த்தைக்காகவும் சகோதரர்களுக்காகவும் உலகத்தாருக் காகவும் பாடுகளைச் சகித்தார்கள்.

*8.* சிலர் இந்த ஏழு அம்சங்களில் கிட்டத்தட்ட எவ்வித முன்னேற்றமும் அடையாதிருந்தார்கள். சிலர் சில அம்சங்களில் ஓரளவிற்கு முன்னேற்றமடைந்திருந்தாலும், மற்றவைகளில் முற்றிலும் முன்னேற்றமடையாதிருந் தார்கள். இவ்வாறாக அவர்கள் இன்னும் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருந்தபோது, அதாவது இந்த கிரீடத்தை இழந்தவர்கள் முன்பு கிரீடத்தைத் தக்க வைத்துக் கொண்டவர்களாக இருந்த போது, பரிசுத்த ஆவி அவர்களில் வெவ்வேறான அளவுகளில் இருந்தது. அவர்கள் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருந்த போது அவர்களிலுள்ள பரிசுத்த ஆவி தேவனுடைய மன இயல்பாக இருந்தது.

## *2. கிரீடத்தை இழந்தவர்கள் ஓரளவிற்கு விசுவாச உண்மைத்துவமில்லாதவர்களாக இருந்தபோது அவர்களிலுள்ள பரிசுத்த ஆவி*

*9.* விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களைக் குறித்து பரிசுத்த பவுல் சொன்ன காரியம் (எபி.3:14) கிரீடத்தை இழந்தவர்களானவர்களில் வெளிப்பட வில்லை. அதாவது அவர்கள் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை (*KJV* பார்க்கவும் - தைரிய உறுதி; அவர் ஆரம்பத்தில் அப்பியாசித்த விசுவாச உண்மைத்துவத்தின் ஆவி) முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றிக் கொள்ளா திருந்தார்கள். மேலே குறிப்பிடப்பட்டதைப் போல், அவர்கள் வெவ்வேறான அளவுகளில் விசுவாச உண்மைத் துவமில்லாதவர்களாக ஆனார்கள். நெருக்கமான பாதை யின் சுமை அவர்களுக்கு மிக பாரமாகத் தோன்றினது. அவர்கள் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருந்த வரை, பரிசுத்த ஆவி அவர்களுக்காக ஊற்றப்படும்போது, அதே அளவான விசுவாச உண்மைத்துவமுடைய சிறு மந்தை வகுப்பாரிலிருந்த அதே விளைவுகள் இவர் களிலும் இருந்தன. சிறுமந்தை, வகுப்பாருக்காகப் பரிசுத்த ஆவி ஊற்றப்படுவதின் விளைவுகளை நாம் முந்திய கட்டுரைகளில் பார்த்தோம். அந்த காரியங்களை முந்திய பத்தியிலிருக்கிற காரியங்களுடன் (கிரீடத்தை இழந்தவர்கள் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருந்தபோது அவர்களிலிருந்த விளைவுகள்) ஒப்பிட்டுப் பார்க்கும்போது இரு வகுப்பாரிலும் ஒரே விதமான விளைவுகள் இருந்ததை நாம் பார்ப்போம்.

*10.* ஆனால் காலப்போக்கில், கிரீடத்தை இழந்த வர்கள் பிரதிஷ்டையில் விசுவாச உண்மைத்துவமா யிருப்பது சற்றுக் குறையத் தொடங்கினது: சுயத்தையும் உலகத்தையும் வெறுப்பதில் அவர்களுடைய ஊக்கம் குறைந்து, அதிகமதிகமாகச் சுயத்திலும் உலகத்திலும் ஈடு படத் தொடங்கினார்கள்! தேவ வார்த்தையின் மேலுள்ள அன்பும், அதைப் படிப்பதற்கான ஆர்வமும் குறைந்தன. தேவ வார்த்தையைத் தவிர மற்ற காரியங்களை அவர்கள் அதிகமதிகமாக விரும்பத் தொடங்கி, அவைகளைப் படிக்கத் தொடங்கினார்கள். சுய பரிசோதனை மற்றும் சுயத்தைகாத்துக் கொள்ளுதல் என்ற அம்சங்களில் விழித் திருத்தலைப் படிப்படியாக அசட்டை செய்யத் தொடங் கினார்கள். மேலும் அதின் இரு அம்சங்களிலும் கவன மற்றவர்களாக இருக்கத் தொடங்கினார்கள். தேவ வார்த்தையைப் பரப்புவதினால் மற்றவர்கள் அவர்களை விரும்பாததினாலும் அது அவர்களுக்குச் சோர்வை உண்டாக்கினதினாலும், மற்றவர்கள் அதில் ஆர்வத்தை வெளிப்படுத்தாததினாலும் அதில் அவர்களுடைய வைராக்கியம் தணிந்தது. மற்றவர்களோடு அவர்கள் கொள்ளும் ஐக்கியங்களில் சத்தியத்தைத் தவிர மற்ற காரியங்கள் அதிகமதிகமாக முன்னிலைக்கு வந்தன. பற்று தல்களை பரத்துக்குரிய காரியங்களின்மேல் வைத்து, அதைக் காத்துக் கொண்டு, குணநலன்களை அபிவிருத்தி செய்து கொள்வதற்குப் புது சித்தம் கடினமாக முயற்சி செய்ய வேண்டியதாக இருந்ததால், இந்த செயல்முறை அவர்களைப் படிப்படியாகக் களைப்படையச் செய்தது. அதற்குப்பிறகு அவர்களுடைய சக்திகள் சுயநலமான மற்றும் உலகத்தனமான வழிகளில் செலவழிக்கப்பட்டன.

*11.* நெருக்கமான பாதைக்குரிய காரியங்களில் அவர்களுடைய ஆர்வம் குறைந்ததால், ஜெபத்தின் மேலுள்ள பற்றையும் அவர்கள் அதிகமதிகமாக இழக்கத் தொடங்கினார்கள். ஜெபத்திலுள்ள உணர்வுகளின் தீவிர மும், இருதய பூர்வமாக ஜெபிப்பதும் படிப்படியாகக் குறைந்தன. கிறிஸ்தவ வாழ்க்கையின் இந்த ஆறு அம்சங் களில் அவர்களுடைய விசுவாச உண்மைத்துவம் இவ் வாறு அதிகமாகவோ குறைவாகவோ குறைந்தபோது, சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தத்தின் நிமித்தம் கடினமான, மகிழ்ச்சியளிக்காத, பிரதிகூலமான மற்றும் எதிரிடையான காரியங்களைப் பொறுத்துக் கொள்ளும் சகிப்பு தன்மையும் குறைந்தது. மேலும் அதற்கேற்றவாறு அவர் கள் சிலுவையைச் சுமப்பதில் விசுவாச உண்மைத் துவமற்றவர்களாக ஆனார்கள். கிரீடத்தை இழந்த அனை

வரும் இந்த ஏழு தீமைகள் எல்லாவற்றிலும் ஈடுபட வில்லையென்றாலும், அவர்கள் எல்லோரும் இவைகளில் ஒன்றையோ அல்லது அதற்கு மேலானவைகளையோ செய்தார்கள்.

*12.* அவர்களுடைய இந்த போக்கின் விளைவாக, தேவனுடைய ஜனங்களிலுள்ள பரிசுத்த ஆவியின் மூன்று உட்கூறுகளுக்கும் அதிக சேதமுண்டாயிற்று. முதலாவதாக அது அவர்களுடைய புதிய ஆவிக்குரிய சித்தங்களைப் படிப்படியாக வலுவிழக்கச் செய்தது. அது அவர்களுடைய சித்தத்தை அதிகமாகவோ குறைவாகவோ உறுதியற்றதாக ஆக்கினது. அடுத்ததாக அவர்களுடைய ஆவிக்குரிய புரிந்து கொள்ளும், ஞாபகப்படுத்திக் கொள்ளும் மற்றும் பகுத்தறிந்து நிதானிக்கும் திறமைகளை மந்தமாக்குவதினால் அவர்களுடைய புது மனதின் கூர்மையான தன்மையை அதிகமாகவோ குறைவாகவோ மழுங்கச் செய்தது. அதின் விளைவாக அவர்கள் முற்காலத்தில் பற்றிக் கொண்டிருந்த சத்தியத்தை விட்டுவிட்டு அதற்குப் பதிலாகத் தப்பறையை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள். மேலும் அவர்களிடம் ஏற்கனவே இருந்த, மற்றும் காத்துக் கொண்ட சத்தியத்தோடு தப்பறையைக் கூட்டினார்கள்.

*13.* இது அவர்களுடைய பரத்துக்குரிய பற்றுதல்களையும் மந்தமாக்கினது, அவர்களுடைய ஆவிக்குரிய தன்னம்பிக்கை, சுய மரியாதை, தேவன், கிறிஸ்து, சகோதரர்கள் ஆகியவர்களை நோக்கி செயல்படும் ஆவிக்குரிய அங்கீகார விருப்பம், ஆவிக்குரிய இளைப்பாறுதல், பாதுகாப்பு, ரகசியம் காத்தல், தற்பாதுகாப்பு தன்மை, வலிய போராடும் தன்மை, ஆவிக்குரிய உடைமைகள், ஜீவன், ஆகாரம், பானம் ஆகியவைகளின் மேல் அவர்களுக்கிருந்த நேசம் ஆகியவற்றைக் குறைத்தது. ஆகையால் இந்த பண்புகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் சுயத்தைத் திருப்தி செய்து கொள்ளும் விதத்தில், சுயநலமான மனுஷீக அம்சங்களில் இந்த பற்றுதல்களை அதிகமாகவோ குறைவாகவோ அபிவிருத்தி செய்து கொண்டார்கள். அதின் விளைவாகப் பெருமை, பகட்டு, சோம்பல், கோழைத்தனம், மாய்மாலம், சண்டை செய்யும் இயல்பு, வன்மம், பொருளாசை, சுயபாதுகாப்பு மற்றும் மிதமின்மை போன்ற இயல்புகளை அதிகமாகவோ குறைவாகவோ வளர்த்துக் கொண்டார்கள். பரத்துக்குரிய கணவர், மணவாளன், பெற்றோர்கள், பிள்ளைகள், சகோதரர்கள், நண்பர்கள், வீடு, தேசம் ஆகியவற்றின்மேல் அவர்களுடைய பற்றுதல்களை வைத்துக் காத்துக் கொள்வதற்குப் பதிலாக, பூமிக்குரிய கணவன், மனைவி, சகோதரர்கள், பிள்ளைகள், நண்பர்கள், வீடு, தேசம் ஆகியவற்றின்மேல் தொடர்ந்து அதிகரித்து மிதமிஞ்சி செயல்படும் பற்றுதல்கள் அதிகமாகவோ குறைவாகவோ கூட்டப்பட்டன. வேறு வார்த்தைகளில் சொன்னால் அவர்களுடைய ஆவிக்குரிய சித்தம் இருதயம் மனம் ஆகியவற்றுடன் கூட அவர்கள் அதிகமாகவோ குறைவாகவோ மாம்சத்திற்குரிய, உலக ரீதியான, பிசாசானவனுக்குரிய சித்தத்தையும் இருதயத்தையும் மனதையும் அதிகமாகவோ குறைவாகவோ அப்பியாசித்தார்கள். இவ்வாறாக அவர்கள் அதிகமதிகமாக இரு மனமுடையவர்களானார்கள் *(யாக். 1:8; 4:8)*.

*14.* நாம் இப்பொழுது விவரித்துக் கொண்டிருக்கிற அவர்களுடைய ஓட்டத்தின் இந்த கட்டத்தில், அவர்கள் இன்னும் ஆவிக்குரிய காரியங்களை மிக அதிகமாக அசட்டை செய்து, பூமிக்குரிய காரியங்களில் மிக அதிகமாக ஈடுபட தொடங்கவில்லை. பிற்காலத்தில் அவர்கள் அவ்வாறு செய்தாலும், இந்த கட்டத்தில் அவர்கள் சுயநலமான மற்றும் உலகத்தனமான காரியங்களை நோக்கி வெவ்வேறான அளவுகளில் முன் சென்றாலும், ஆவிக்குரிய காரியங்களை நோக்கியும் சென்று கொண்டிருந்தார்கள். ஆவிக்குரிய காரியங்களோடு சுயநலமான மற்றும் உலகத்தனமான காரியங்களைப் பெரிதளவில் கலந்து கொண்டிருந்தார்கள். இவ்வாறாக அவர்கள் இரு மன போக்கை வளர்த்துக் கொண்டார்கள்.

*15.* அவர்கள் பரிசுத்த ஆவியைத் தக்க வைத்துக் கொண்டாலும், உலகத்தனமான மற்றும் சுயநலமான ஆவிக்கும் இடங் கொடுத்தார்கள். வெவ்வேறான வேகங்களில் ஓடுகிற இரு குதிரைகளில் ஒன்றின்மேல் ஒரு காலையும், மற்றொன்றின் மேல் வேறொரு காலையும் வைத்துப் பிரயாணம் செய்தார்கள். அவர்கள் கலப்பையின் மேல் தங்கள் கைகளை வைத்து, பின்னிட்டு பார்க்கிறவர்களாக இருந்தார்கள். அதின் விளைவாக அவர்கள் ஓடி, இடறி விழுந்து, எழுந்து, திரும்ப ஓடி, திரும்ப இடறி விழுந்தார்கள். திரும்பத் திரும்ப இதே செயல்முறை நடந்தாலும், சுயநலமான உலகத்தனமான காரியங்களைவிட ஆவிக்குரிய காரியங்கள் மேலான நிலையிலிருந்தன. அவர்களுடைய இரு மனப்போக்கு இன்னும் அதிகமாக வெளிப்படவில்லையென்றாலும், அவர்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையை அதிருப்தியான ஒன்றாக ஆக்குமளவிற்கு அது அவர்களில் காணப்பட்டது.

*16.* இருந்தாலும் இந்த இரண்டாம் கட்டத்தை நாங்கள் ஓரளவிற்கு விசுவாச உண்மைத்துவமில்லாத நிலை என்று வர்ணிப்பதிலிருந்து, அவர்களுடைய மனஇயல்பின் பெரும்பகுதி நன்மையானதாக இருந்ததென்பதைக் காண்கிறோம். அந்த பகுதியில் அவர்களிலுள்ள பரிசுத்த ஆவியானது அவர்களிலுள்ள தேவனுடைய மனஇயல்பாகும் என்பதையும் காண்பிக்கிறது. ஆனால் அந்த மனஇயல்பு அவர்களுடைய மனதில் ஓரளவிற்குத் தீமையாக இருக்கிற பகுதியினால் அதிகமாகவோ குறைவாகவோ கட்டுப்படுத்தப்பட்டது. அவர்களுடைய அனுபவத்தின் இந்த கட்டத்தில், அவர்களுடைய தனிப்பட்ட தியானங்களிலும், சகோதரர்களோடு அவர்கள் கொள்ளும் ஐக்கியங்களிலும் தேவ வார்த்தையின் மூலம் (அச்சடிக்கப்பட்ட பிரதிகள் மற்றும் வாயின் வார்த்தைகள்) தேவன் அவர்களைப் பெரிதும் கடிந்து கொள்வார். அவர்கள் மனந்திரும்பும் படிக்கும், தங்களுடைய பிரதிஷ்டையைப் புதுப்பித்துக் கொள்ளும் படிக்கும் அவர்களுக்குத் தேவையான போதனைகளையும், கண்டனங்களையும், சீர்திருத்தங்களையும், புத்திமதிகளையும் திரும்ப திரும்ப அனுப்புவார். மேலும் அவர்கள் தீமையான மனதை வளர்த்துக் கொள்வதைக் கட்டுப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட பரிபாலனங்களை அவர்களுடைய வாழ்க்கைகளுக்குள் அனுப்புவார். அவர்கள் பிரதிஷ்டையின் வாழ்க்கையைத் தவிர்க்கும்படி செய்யும் முயற்சிகளையும், சுயநலத்திலும் உலகத்தனத்திலும் ஈடுபடும்படி செய்யும் முயற்சிகளையும் இந்த பரிபாலனங்கள் தடுக்கும். மேலும் அவர்களுடைய மன இயல்புகளில் வளர்ந்து கொண்டிருக்கிற தீமையான பகுதியை அழிக்க வேண்டுமென்று அவர்களுடைய மனதின் நன்மையான பகுதியைத் தொடர்ந்து தூண்டும் பரிபாலனங்களை அனுப்புவார்.

*17.* அவர்கள் இந்த கட்டுப்பாடுகளுக்குக் கவனம் செலுத்தவில்லையென்றால், அவர்களை உணர்த்துவதற்குத் திட்டமிடப்பட்ட சிட்சை ரீதியான பரிபாலனங்களை அனுப்புவார். ஆனால் கிரீடத்தை இழந்தவர்

களாக ஆகப்போகிறவர்கள் இந்த பரிபாலனங்களுக்கு வெவ்வேறான விதங்களில் பிரதிகிரியை செய்வார்கள். அவர்கள் பாவஞ் செய்து, மனந்திரும்பி, திரும்பப் பாவஞ் செய்து மனந்திரும்பி, அதிகமதிகமாக விருப்பதுணிவுடன் செயல்படுவார்கள். இறுதியாகக் கர்த்தருடைய நீடிய சகிப்பு முடிவுக்கு வரும். அவர் அவர்களுடைய கிரீடங் களை அவர்களிடமிருந்து எடுத்துப் போடுவார். இவ்வா றாக அவர்களைக் கிரீடத்தை இழந்தவர்களின் வகுப்பு க்குள் அனுப்புவார். இந்த நிலையில் அவர்களுடைய மாம்ச சிந்தையை அழிக்கும்படிக்குத் திட்டமிடப்பட்ட வேறு வகையான அனுபவத்தைக் கர்த்தர் அவர்களுக்கு அளிப்பார்.

*18.* அவர்களைக் கிரீடத்தை இழக்கும் நிலைக்குக் கொண்டு செல்லும் விருப்பதுணிவின் பாதை கள் வெவ்வேறாக இருக்கும். சிலர் சுயநலமான மற்றும் உலகத்தனமான நிலைகளின் வழியாகச் செல்வார்கள் *(1 கொரி 9:27; 1தீமோ. 6:9,10)*. சிலர் பாவமான நிலைகள் வழியாகச் செல்வார்கள் *(1கொரி. 5:5; யூதா 23)*. சிலர் தப்பறையான நிலைகள் வழியாகச் செல்வார்கள் *(1 தீமோ. 1:19, 20; சங். 107:10, 11)*. இன்னும் சிலர் இந்த நிலைகள் இரண்டோ அல்லது மூன்றோ இணைந்த நிலைகள் வழியாகச் செல்வார்கள் *(1 கொரி. 3:12-15; மத். 7:26, 27; 25:2, 3, 8, 10-12; வெளி. 7:9, 13, 14)*. அவர்கள் அவ்வாறு இருக்கும்போதும் கூட ஓரளவிற்குப் பரிசுத்த ஆவியை இன்னும் தக்க வைத்துக் கொள்வார்கள். அது அவர்களுடைய மனதின் நல்ல பகுதியாக, அவர் களிலுள்ள தேவனுடைய மனஇயல்பாக இருக்கிறது.

## 3. மிகவும் விசுவாச உண்மைத்துவமில்லாதவர்களாக இருந்தபோது அவர்களிலுள்ள பரிசுத்தஆவி

*19.* அவர்கள் ஓரளவிற்கு விசுவாச உண்மைத் துவமில்லாதவர்களாக இருந்தபோது, அவர்களுடைய மன இயல்புகளில், நன்மையிலிருந்து தொடங்கி, நன்மை யும் தீமையும் கலந்த நிலைக்குப் படிப்படியான மாற்றம் இருந்ததென்று நாம் பார்த்தோம். அவர்களிலுள்ள பரிசுத்த ஆவி அந்த நன்மையான பாகமாக இருந்த தென்றும் பார்த்தோம். அது போலவே அவர்கள் மிகவும் விசுவாச உண்மைத்துவமில்லாதவர்களாக இருக்கும் போதும் அவர்களில் ஒரு படிப்படியான மாற்றம் இருந் தது. ஏனென்றால் அவர்களில் ஏற்படும் இந்த சீர்கேடு வெவ்வேறான அளவுகளிலிருக்கும். அவர்களில் மிக மோசமானவர்களில் தீமையான மனம் நல்ல மனதை மிஞ்சி செயல்படும். ஆனால் மிக சிலரில் நல்ல மனம் தீமையான மனதை மிஞ்சி செயல்படும். இவர்கள் பரம அழைப்பில் கிட்டத்தட்ட வெற்றியடைந்து, சற்றுத் தவறினவர்களாக இருக்கிறார்கள். சிலரின் நல்ல மனமும் தீய மனமும் ஏறக்குறைய பாதி பாதியாக இருக்கும். அவர்கள் இந்த இரு நிலைகளுக்கிடையில் ஊசலாடி கொண்டிருப்பார்கள்.

*20.* ஆனால் யாக்கோபு அப்போஸ்தலர் சொல் வதைப் போல் அவர்கள் அனைவரிலும் இருமனம் இருக்கும்: *"இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்" (யாக். 1:8).* நாம் மேலே பார்த்ததைப் போல் இந்த இரு மனபோக்கில் தனிநபர் களுக்கிடையில் அதிக வித்தியாசம் இருக்கும். அவர்கள் மிகவும் விசுவாச உண்மைத்துவம் இல்லாதவர்களாக இருக்கும் இந்த கட்டத்தில் அவர்களுடைய இருமன போக்கின் தீமையான பகுதி அதிக நேரம் கிரியை செய்யும். ஆனால் அது வெவ்வேறான நபர்களில் வெவ் வேறான அளவுகளில் செயல்படும் என்பதை நாம் எப் போதுமே மனதில் கொள்ள வேண்டும். அவர்கள் புரட்சி செய்து எப்போதுமே வேதாகம போதனைகளை அதிகமாகவோ குறைவாகவோ புறக்கணிப்பார்கள். மேலும் தேவனுடைய ஊழியத்திற்காக அவர்தாமே கொடுத்த ஏற்பாடுகளை அதிகமாகவோ குறைவாகவோ புறக்கணிப்பார்கள். அல்லது இந்த இரு வகையான கலகங்களைச் செய்கிற தலைவர்கள் அல்லது அவர் களால் நடத்தப்படுகிறவர்களை கட்சி பற்றுடன் ஆதரிப் பார்கள். இப்படிப்பட்டவர்கள் சிலர் ஒரு கூட்டமாகச் சேரும்போது, அவர்கள் மதப்பிரிவு கட்சி பற்றுடைய வர்களாக ஆவார்கள். அவர்களுடைய தலைவர்கள் எப் போதுமே அதிகாரத்தை அபகரித்து தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாயிருப்பார் கள் *(1பேது. 5:2)*. பணம், செல்வாக்கு, மனுஷரால் கனம் பண்ணப்படுவது, தலைவர்களாக இருப்பது ஆகியவற் றின் மேலுள்ள பற்றினால் தவறு செய்வார்கள்.

*21.* அவர்கள் சாத்தானால் கையாளப்படுவதி னால் அவர்களிலுள்ள இந்த தீய பண்புகள் அதிகரிக்கும் போது, அதிகரித்துக் கொண்டிருக்கும் தப்பறைகளுக்குள் ளும், கர்த்தருடைய ஊழியத்திற்காக சாத்தான் கொடுக் கிற தவறான ஏற்பாடுகளுக்குள்ளும் அவர்களைப் பின் பற்றுபவர்களை நடத்துவார்கள். இந்த புரட்சிகளினால், விசுவாச உண்மைத்துவமுள்ளவர்கள் அவர்களை எதிர்ப் பார்கள். கருத்து வேறுபாடுகள் தொடங்கும். அவர் களுடைய தப்பறைகளை எதிர்த்து விசுவாச உண்மைத் துவமுள்ளவர்கள் கொண்டுவரும் வேதாகம சத்தியங் களுக்கு எதிராகத் தங்களுடைய நிலையைக் காத்துக் கொள்வதற்கும் அவர்களுடைய தப்பறைகளுக்கிடையில் முரண்பாடுகள் இல்லாததாகத் தோன்றும் ஒரு நிலையைக் காத்துக் கொள்வதற்கும், அவர்கள் ஒரு சத்தியத்திற்குப் பிறகு மற்றொரு சத்தியத்தைப் புறக்கணிப்பார்கள். மதப்பிரிவு பற்றுடன் அவர்களைப் பின்பற்றுகிற கிரீடத்தை இழந்தவர்கள் இந்த கருத்து வேறுபாடுகளில் தங்களுடைய தலைவர்களைக் கட்சி பற்றுடன் ஆதரிப் பார்கள். இவ்வாறாக அவர்களும் அவர்களுடைய தலைவர்களுடன் கர்த்தருடைய சத்தியங்களையும் ஏற்பாடுகளையும் அதிகமதிகமாக இழப்பார்கள். ஆனால் அவர்கள் புதிதாக ஏற்றுக் கொண்ட இந்த தப்பறை களுக்கு முரண்பாடாக இல்லாத முற்காலத்தின் சத்தியங் களையும் ஏற்பாடுகளையும் பற்றிக் கொள்வார்கள். இவைகள் எல்லாவற்றினால் அவர்கள் சத்தியத்திற்கும் தப்பறைக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைக் கண்டு கொள்ளும் திறனின் ஒரு பகுதியை அதிகமதிகமாக இழப்பார்கள். இது அவர்களுடைய அறிவாற்றலின் தீமையான பகுதியிலும், அவர்களுடைய அறிவாற்ற லிலுள்ள காரியங்களிலும் உண்டாகுகிற ஒரு சீர்கேட்டை வெளிப்படுத்துகிறது. அதே நேரத்தில் அவர்களுடைய அறிவாற்றல் சில சத்தியங்களை அறிந்து கொண்டு தக்க வைத்துக் கொள்வது சம்பந்தமாக முற்காலத்திலிருந்த கொஞ்சம் திறனை இன்னும் தொடர்ந்து வைத்திருக்கும். அவர்களுடைய அறிவாற்றலில் வெவ்வேறான அளவு களில் இரு மனபோக்கு காணப்படும்.

*22.* அவர்களுடைய மனம் சீர்கேடடையும் போது, அவர்களுடைய இருதயங்களும் சீர்கேடடையும். அவர்களுடைய மனம் சீர்கேடடைந்திருக்கிறது என்பதே, அதற்கு முன் அவர்களுடைய இருதயம் ஓரளவிற்குச்

சீர்கேடடைந்திருப்பதை அர்த்தப்படுத்தும். மேலும் அவர்களுடைய மனம் சீர்கேடடையும்போது, அதைத் தொடர்ந்து அவர்களுடைய இருதயம் இன்னும் மோசமாகச் சீர்கேடடையும். அவர்களுடைய மனதிலுள்ள இந்த தப்பறைகள் நிச்சயமாக அவர்களுடைய விசுவாசத்தை வலுவிழக்கச் செய்யும். அவர்களுடைய மனச்சாட்சிகளை அதிகமாகவோ குறைவாகவோ சுட்டெரிக்கும். அவர்களுக்கும் கர்த்தருக்கும் இடையில் ஒரு மேகத்தை உருவாக்கும். அவர்களுடைய ஜெபத்தின் ஆவியையும், தேவனுடைய தயவு ஐக்கியம் மற்றும் அங்கீகாரத்தைப் பற்றிய ஊக்கமான உணர்வையும் குறைக்கும். மேலும் அவர்களுடைய தவறான போக்கை விசுவாச உண்மைத்துவமுள்ளவர்கள் எதிர்ப்பதினால், விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களை கசப்பான கட்சி பற்றுடன் அதிகமாகவோ குறைவாகவோ எதிர்க்கச் செய்யும். சாத்தானுடைய கண்ணிகளிலிருந்து அவர்களைத் தப்புவிப்பதற்காக விசுவாச உண்மைத்துவமுள்ளவர்கள் செய்யும் முயற்சிகளின் நிமித்தம் அவர்கள் அவர்களை இன்னும் அதிகமாக நேசித்து மதித்துணர வேண்டியதாக இருந்தாலும், அவர்கள் அவர்களை எதிர்ப்பார்கள்.

*23.* மேலும் அவர்களுடைய கட்சி பற்றின் ஆவியானது, மதப்பிரிவு பற்றில் அவர்களுடைய இருதயங்களை வெவ்வேறான அளவுகளில் கடினமாக்கும். இந்த மதப்பிரிவு பற்றினால் அவர்களுடைய மதபிரிவை எப்போதுமே கட்சி பற்றுடன் ஆதரிப்பார்கள். கட்சியைக் கட்டுவதற்காகவும், அதிகாரத்தை அபகரிப்பதற்காகவும், இறுமாப்பாய் ஆளுவதற்காகவும் அவர்களுடைய தலைவர்கள் செய்யும் தந்திரங்களினாலும், பணம், கனம், அதிகாரம், செல்வாக்கு, தலைவனாயிருக்கும் நிலை ஆகியவற்றின் மேலுள்ள பற்றினாலும் அந்த தலைவர்களின் இருதயங்கள் சீர்கேடடைகின்றன. சுருக்கமாகச் சொன்னால் அவர்களுடைய மதப்பிரிவு பற்றினாலும், குருமார் கொள்கையின் மேலுள்ள பற்றினாலும் அவர்களுடைய இருதயங்கள் சீர்கேடடைகின்றன. அவர்களால் வழிநடத்தப்படுபவர்கள் மதப்பிரிவு மற்றும், குருமார் கொள்ளையின்மேல் பற்றுள்ள இந்த தலைவர்களுக்குக் கீழ்ப்படிந்து, மனுஷருக்குப் பயப்படுகிற பயத்தையும் அடிமைத்தனத்தையும் வளர்த்துக் கொள்வார்கள். இது அவர்களுடைய இருதயங்களை அடிமைத்தனமுள்ளவைகளாகவும், கட்டுப்படுத்தப்பட்டவைகளாகவும் ஆக்கும். இது பரிசுத்த ஆவியின் புத்திரத்துவத்தின் மனஇயல்புக்கும், தேவனுடைய ஜனங்களிடம் இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிற சுயாதீனத்தின் ஆவிக்கும் விரோதமாகக் கிரியை செய்யும் *(ரோம. 8:15; கலா. 4:31;5:1).* இவைகள் எல்லாம் சேர்ந்து அதிகமாகவோ குறைவாகவோ ஆவிக்குரிய நோயுற்ற நிலையையும், தரித்திரத்தையும், கனி கொடுக்காத நிலையையும் விளைவிக்கும்.

*24.* புது சித்தத்தின்மேல் இவைகளெல்லாவற்றின் தாக்கத்தினால் அது பெலவீனமாகும். அந்த புது சித்தத்தின் ஊற்றுத் திறமையாகக் கிரியை செய்வதை இது குறைக்கும். ஆனால் இந்த நிலையில் அதை இன்னும் முற்றிலும் அழிக்காது. புது சித்தத்தின் ஊற்றானது, விசுவாசம், நம்பிக்கை சுயகட்டுப்பாடு,பொறுமை, தேவ பக்தி, சகோதர சிநேகம் மற்றும் தியாக அன்பு ஆகியவற்றின் ஒன்றிணைத்தலாகும். முதன்மையான நிலையில், இந்த இணைவிலிருந்தும், அதின் வெளிப்பாடாகவும் கிரியை செய்யும் புது சித்தத்தின் பெலன் குறையும்போது, முற்காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த உயர்நிலை முதன்மை தவறுகள் அதிகமாகவோ குறைவாகவோ திரும்ப எழும்பத் தொடங்கும். அந்த தவறுகளாவன: அவிசுவாசம், அதைரியம், திட சித்தமின்மை, மனஉறுதியின்மை, தேவ பக்தியின்மை, சகோதர பற்றின்மை, அன்பின்மை என்பவைகளாகும். மேலும் சரியான சுய மதிப்பீடு அங்கீகார விருப்பம், சமாதானம், எச்சரிக்கையோடிருத்தல், ரகசியம் காத்தல், போரிடும் குணம், வலிய தாக்கும் குணம், பரிபாலன விருப்பம், ஆகாரத்திற்கான விருப்பம், ஜீவனில் பற்று, எதிர்பாலின விருப்பம், கணவன் மனைவிக்குரிய பற்று, பிள்ளைகளுக்குரிய பற்று, சகோதரருக்குரிய பற்று, நட்பு, வீட்டின்மேல் பற்று, தேசபற்று ஆகியவைகளும் ஓரளவிற்கு இழக்கப்படும். சுருக்கமாகச் சொன்னால் புது சித்தத்தின் பலம் குறைவதின் விளைவாக முற்காலத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த உயர்நிலை மற்றும் தாழ்நிலை முதன்மை குணநலன்கள் குறையும்.

*25.* அதுபோலவே, புது சித்தத்தின் பெலன் இவ்வாறு குறையும் போது, அவர்களைக் கட்டுப்படுத்தும்படி தாழ்நிலை முதன்மை பற்றுதல்களும் குணநலன்களும் செய்யும் முயற்சிகளை அடக்கும்படிக்கும் புது சித்தத்தின் திறமை பெலவீனமாகும். அதின் விளைவாகத் தாழ்நிலை முதன்மை பற்றுதல்களும் குணநலன்களும் புது சித்தத்தின் மேல் அதிகமதிகமாக வெற்றியடையும். அதின் விளைவாகத் தாழ்நிலை முதன்மை தவறுகள் அதிகமதிகமாக வளரும். அதாவது பெருமை, பகட்டு, சோம்பல், கோழைத்தனம், மாய்மாலம், பொருளாசை, பெருந்திண்டி, குடிபழக்கம், சண்டை செய்யும் குணம், வன்மம், கசப்பு, விட்டுக்கொடாதிருக்கும் தன்மை, பழிவாங்கும் தன்மை, மன்னிக்காமலிருப்பது, சுயபலியை மறுப்பது, கற்பின்மை, கணவனுக்குரிய தவறானபற்று, மனைவிக்குரிய தவறானபற்று, பிள்ளைக்குரிய தவறான பற்று, சகோதரருக்குரிய தவறானபற்று, தவறான நட்பு, வீட்டின்மேல் தவறான பற்று, தவறான தேசபற்று ஆகியவைகள் ஓரளவிற்கு வளரும்.

*26.* மேலும் இது இரண்டாம் நிலை குணநலன்களையும் அதிகமாகவோ குறைவாகவோ பெலவீனமாக்கும். அவைகளாவன மனத்தாழ்மை, தன்னடக்கம், சுறுசுறுப்பான உழைப்பு, தைரியம், ஒளிவு மறைவின்மை, தாராள குணம், மட்டான உணவு பழக்கம், நீடிய சகிப்பு, பொறுத்துக் கொள்ளுதல், மன்னிக்கும் குணம், சுயதியாகம், கற்புடைமை, கட்டுப்படுத்தப்பட்ட கணவன் மனைவிக்குரிய பற்று, கட்டுப்படுத்தப்பட்ட பிள்ளைகளுக்குரிய பற்று, கட்டுப்படுத்தப்பட்ட சகோதரருக்குரிய பற்று, கட்டுப்படுத்தப்பட்ட நட்பு, கட்டுப்படுத்தப்பட்ட வீட்டின்மேல் பற்று, கட்டுப்படுத்தப்பட்ட தேச பற்று.

*27.* இறுதியாக இது வைராக்கியம், பணிவுநயம், மனநிறைவு, சந்தோஷம், கீழ்ப்படிதல், மென்நயம், நடுநிலையோடிருத்தல், நற்குணம், இரக்கம், போற்றி துதிக்கும் பயபக்தி, பாரபட்சமின்மை, விசுவாச உண்மைத்துவம் ஆகிய மூன்றாம் நிலை குணநலன்களைக் குறைக்கும். மேலும் அவைகளுக்கெதிரிடையான இயல்புகளாகிய வைராக்கியமின்மை, முரட்டு தனமாக அதிகாரத்தை மீறும் தன்மை, அதிருப்தி, துக்கம், கீழ்ப்படியாமை, முரட்டுதனம், தீவிரவாதம், குறுகிய மனப்பான்மை, கொடூரம், பயபக்தியின்மை, பாரபட்சம், உண்மைத்துவமின்மை ஆகியவைகள் ஓரளவிற்கும் எழும்பும்.

*28.* ஆனால் இந்த நிலையில்,புது சித்தம் இவ்வாறு பெலவீனமாக்கப்படுவதென்பது, குணநலன்கள் முற்றிலும் அழிக்கப்படுவதையும் குணகேடுகள் தீவிரமாக செயல்படுவதையும் அர்த்தப்படுத்தாது. ஏனென்

றால் அவ்வாறான ஒரு காரியம் ஒருவனைத் திரள்கூட்ட அங்கத்தினராக இருக்கும் நிலையையும் இழக்கச் செய்து, அவனை இரண்டாம் மரணக்காரனாக்கும். புது சித்தம் இவ்வாறு பெலவீனமடைவதென்பது, அவனிடம் ஏற்கனவே இருந்த குணநலன்கள் அதிகமாகவோ குறைவாகவோ மோசமான நிலைக்குச் சீர்கேடடைவதை அர்த்தப்படுத்துகிறது. அதினாலே அவன் கிரீடத்தை இழந்திருந்தான். மேலும் முற்காலத்தில் அவனிடமிருந்த குணகேடுகள் இன்னும் அதிக அளவிற்கு எழும்புவதையும் அர்த்தப்படுத்தும். அதினாலும் அவன் கிரீடத்தை இழந்திருந்தான்

*29.* மேலும் நன்மை இவ்வாறு சீர்கேடடைவதும், தீமையான பண்புகள் வளருவதும் வெவ்வேறு நபர்களில் வெவ்வேறான அளவுகளில் நடைபெறும் என்பதையும் நாம் நினைவு கூர வேண்டும். மேலும் அவர்களெல்லோரும் எல்லா குணநலன்களிலும் சீர்கேடடைவார்களென்றும், எல்லா தவறுகளிலும் வளருவார்கள் என்றும் நாம் எண்ணக் கூடாது. சிலர் சில அம்சங்களில் அதைச் செய்வார்கள், ஆனால் எதிலும் உச்ச நிலைக்கு அதைச் செய்யமாட்டார்கள். மற்றவர்கள் அதிக அம்சங்களில் அவ்வாறு செய்யக் கூடும். ஆனால் திரள் கூட்டத்தாரைச் சேர்ந்த எந்த ஒருவனும் எல்லா அம்சங்களிலும் அவ்வாறு செயல்படுவதில்லை. ஆனால் நன்மையின் இந்த சீர்கேடுகள் மற்றும் தீமையான இயல்புகளின் அதிகரித்தலின் மத்தியில், அவர்களிலுள்ள தேவனுடைய மனஇயல்பாகிய பரிசுத்த ஆவியை ஓரளவிற்காவது காத்துக் கொள்வதற்குத் தேவையான அளவான நன்மை அவர்களில் எப்போதுமே இருக்கும். ஆனால் அவர்கள் பெற்றிருந்த அபிஷேகம் எந்த அளவானதாக இருந்திருந்தாலும் அதை அவர்கள் இழப்பார்கள். இவ்வாறாகச் சுவிசேஷ யுகத்தில் பலி செய்யும் ஆசாரியர்களாகவும், வருங்காலத்திற்குரிய ராஜாக்களாகவும் செயல்படும் தகுதியை இழப்பார்கள். மேலும் மில்லினிய யுகத்தில் ஆசீர்வதிக்கும் ஆசாரியர்களாகவும், ஆளுகை செய்யும் ராஜாக்களாகவும் இருக்கும் தகுதியையும் இழப்பார்கள்.

*30.* அவர்கள் தங்களைச் சுத்திகரித்துக் கொண்ட பிறகு, பரிசுத்த ஆவியாகிய நிலைவரமான ஆவியை *(right spirit)* அவர்கள் உள்ளத்திலே புதுப்பித்துக் கொள்வார்கள். ஆனால் அவர்கள் இனி ஒருபோதும் அபிஷேகத்தில் பங்கு கொள்வதில்லை. ஒருவன் ஆசாரியனாக தன் நிலையைக் காத்துக் கொள்ளும்வரை மட்டுமே அபிஷேகம் என்பது அவனுடைய சிலாக்கியமாக இருக்கும். அவர்கள் கிரீடத்தை இழந்திருப்பதால், ராஜரீக ஆசாரியக் கூட்டத்திலிருந்து நீக்கப்பட்டு, ராஜ்யத்தில் லேவியர்களாக இருக்கும் நிலைக்கும் பிரபுக்களாக இருக்கும் நிலைக்கும் அனுப்பப்படுவார்கள். அவர்களிடம் அபிஷேகம் இல்லாததால், மில்லினிய யுகத்தில் ஆசாரியர்களாகவும் ராஜாக்களாகவும் இருக்கும் நிலையை அவர்கள் ஒருபோதும் அடைவதில்லை. மாறாக அவர்கள் ஆலயத்திலிருக்கும் லேவியர்களாகவும் *(ஏசா. 66:21,* லேவியர்கள்; வெளி. *7:15)*, சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கும் பிரபுக்களாகவும் இருப்பார்கள் *(*வெளி. *7:15;* சங். *45:14,15).*

## *4.* அஸாசேலினால் (சாத்தான்) அடிக்கப்படும்போது அவர்களிலுள்ள பரிசுத்த ஆவி

*31.* அவர்களை மறுபடியும் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக ஆக்குவதற்கு அவர்கள் அஸாசேலினால் அடிக்கப்படும் போது, அவர்களிலுள்ள பரிசுத்த ஆவியைக் கருத்தில் கொள்வோம். விருப்ப துணிவு, கட்டுக்கடங்காத தன்மை, கலகம், தப்பறை, பாவம், சுயநலம், உலகத்தனம் ஆகியவைகள் அவர்களில் அதிகமாகவோ குறைவாகவோ இருந்தாலும், தேவன் இன்னும் அவர்களை நேசிக்கிறார். அவர்கள் இன்னும் தேவனுடைய குமாரத்திகளாக இருக்கிறார்கள். தகப்பனாக அவருடைய இருதயம் அவர்களுடைய விழுந்து போன நிலையைக் கண்டு இரக்கங் கொண்டு, அவர்களுடைய புது சிருஷ்டிகளை இரட்சிக்க ஆவலாயிருக்கிறது. அவர்கள் சீர்திருந்தும்படிக்கு ஒழுக்க ரீதியான அறிவுறுத்தலின் மூலம் அவர்களை இணங்க வைப்பதற்கு அவர்களுடைய விருப்ப துணிவு தடையாயிருப்பதால், அவர்களை மீட்டுக்கொள்வதற்கு பரம பிதா உண்மையான ஒரு தகப்பனைப் போல் முதலில் துன்பமென்னும் பிரம்பை உபயோகிப்பார். அதை இரு வகைகளில் உபயோகிப்பார்.

*32.* முதலாவதாக அவர்கள் செய்கிற ஓரளவான நன்மையும் ஓரளவான தீமையும் கலந்த ஊழியத்தை எதிர்க்கிற மனுஷர்களின்மேல் தேவன் வைத்திருந்த கட்டுப்பாடுகளை எடுத்து விடுவார். அவர்களுடைய தவறான புரிந்து கொள்ளுதலினால் தவறாக நடத்தப்படுகிற, அதிகமான அல்லது குறைவான வைராக்கியத்துடன், அவர்கள் மதரீதியான ஊழியத்தில் பங்கு கொள்வார்கள். அவர்களுடைய ஊழியம் ஓரளவிற்கு நன்மையானதாகவும் ஓரளவிற்குத் தீமையானதாகவும் இருப்பதால், அது அவர்களுக்கு விரோதமாக எதிர்ப்பையும் துன்புறுத்தலையும் தூண்டி விடும். இது அவர்களுக்குப் பாடுகளைக் கொண்டு வரும். அவர்களிலுள்ள ஓரளவான நீதியின் காரணமாகவும், ஓரளவான தப்பறையின் காரணமாகவும் தவறுகளின் காரணமாகவும் அவர்களுக்கு இந்த பாடுகள் வருகின்றன. பெரிய மற்றும் சிறிய பேர் சபைகளிலிருந்து அவர்களுக்கு இந்த துன்புறுத்தல்கள் வரும். சிலரில் இது கிட்டத்தட்ட முழுமையான சீர்திருத்தலுக்கு அவர்களை நடத்தும். விசேஷமாக உலகத்தனத்திற்கு இடங்கொடுத்து, உலகத்தாரின் தயவையும் உலகரீதியான அனுகூலகத்தையும் நாடினவர்களை, உலகத்திலுள்ள எல்லாவற்றின் வீணான தன்மையை மதித்துணரச் செய்யும்.

*33.* தேவன் அவர்கள் மேல் உபயோகிக்கிற பிரம்பின் இரண்டாம் வகை அனுகூலமற்ற சூழ்நிலைகள் என்பதாகும். எடுத்துக்காட்டாக, செழிப்பு, நற்பெயர், சுகம், கனம், பதவி, வியாபாரத்தில் வெற்றி போன்ற அவர்களுடைய உலகரீதியான ஆசைகள் நிறைவேறாதபடி தேவன் செய்வார். அதற்குப் பதிலாக அவர் அவைகளை ஏமாற்றங்களாகவும், துயரமாகவும், துக்கமாகவும், தோல்வியாகவும், நற்பெயர் இன்மையாகவும், கனம் இல்லாத நிலையாகவும், பின்னணிக்குத் தள்ளப்படுவதாகவும், வியாபாரத்தில் நஷ்டமடைவதாகவும் மாற்றுவார். அவர்கள் பல நேரங்களில் குளவி கூட்டை போன்ற வீட்டில் வாழ்வதை அனுமதிப்பார். இது அவர்களுடைய குடும்பத்தில் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் அழிக்

கும். சபையிலும் அவர்களுக்கு இவ்வித துயரமான அனுபவங்கள் நேரிடுவதை அவர் அனுமதிப்பார். தேவன் கோபத்தினால் அவர்களுக்கு இந்த சூழ்நிலைகளை அனுப்புவதில்லை. மாறாக அவர்கள் சுயநலத்தையும் உலகத்தனத்தையும் விட்டுவிடும்படி செய்வதற்கு அன்பினாலே இந்த சூழ்நிலைகளை அவர்களுக்கு அனுப்புகிறார்.

*34.* அவர்கள் ஈடுபடுகிற பாவமான காரியங்களை அவர்களுக்கு எரிச்சலுண்டு பண்ணும் அனுபவங்களாகவும், கால்களில் முட்கள் குத்துவதற்கும், முதுகில் சாட்டைகளால் அடிக்கப்படுவதற்கும் ஒத்த அனுபவங்களாகவும் ஆக்குவார். வருத்தத்தினால் அவர்களுடைய மனச்சாட்சி குத்தப்படும்படியும் செய்வார். எட்டியையும் பிச்சியையும் (போன்ற கசப்பான காரியங்களை) புசிப்பதினால் உண்டாகும் அருவருப்புக்கு ஒத்த உணர்ச்சி அவர்களுக்கு வரும்படி செய்வார். அவர்களை இவ்வாறு துன்புறுத்துகிற நபர்களினாலும் அனுகூலமற்ற அனுபவங்களினாலும், அவர்கள் சற்று நின்று, தாங்கள் செய்த காரியங்களைக் குறித்துச் சிந்தித்துத் தங்களுடைய ஆவிக்குரிய நிலையைக் குறித்துக் கவனத்துடன் சிந்தித்துப் பார்ப்பார்கள். ஆதாமினால் வந்த சீர்கேட்டிற்குக் கூடுதலாக, அவர்கள் சுயசித்தமாகச் சேர்த்துக்கொண்ட மாம்சத்தின் மற்றும் ஆவியின் அசுசீயிலிருந்து தங்களைச் சுத்திகரித்துக் கொள்ள இது உதவும். ஆனால் அவர்களுடைய புது மனம், இருதயம் மற்றும் சித்தம் ஆகிய அவர்களுடைய பரிசுத்த ஆவியைச் சுயத்திற்கும் உலகத்திற்கும் பாவத்திற்கும் அடிமைகளாக இருக்கும்படி அவர்கள் தாமே வளர்த்துக் கொண்ட காரியங்களிலிருந்து முழுமையாக விடுவிப்பதற்கு இந்த அனுபவங்கள் மட்டுமே போதாது. ஆனால் மயிரிழையில் சிறுமந்தை வகுப்பாராயிருக்கும் தகுதியை இழந்தவர்களைக் கிட்டத்தட்ட முழுமையாக விடுவிப்பதற்கு இதுவே போதுமானதாக இருக்கும். இவ்வாறாகக் கிரீடத்தை இழந்தவர்களிலுள்ள தேவனுடைய மனஇயல்பாகிய அவர்களுடைய பரிசுத்த ஆவியை இவ்வித அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்குப் பிரம்பு உதவும் என்று நாம் பார்த்தோம்.

*35.* திரள்கூட்ட அங்கத்தினர்கள் வளர்த்துக் கொண்ட உலகத்தனம், சுயநலம், தப்பறை, பாவம் ஆகியவற்றிற்கு அடிமைப்பட்ட நிலையிலிருந்து அவர்களுடைய பரிசுத்த ஆவியை முழுமையாக விடுவிப்பதற்கு பிரம்பின் இந்த இரு வகையான உபயோகங்கள் மட்டுமே போதாதவைகளாக இருக்கின்றன. மேலும் அவர்களில் பெரும்பான்மையானோரில் இது மிக சிறிய மாற்றத்தை மட்டுமே உண்டு பண்ணும். மற்றவர்களில் வெவ்வேறான அளவுகளில் மாற்றங்களை உண்டு பண்ணாலும், அவர்களை முழுமையாக விடுவிக்காது. ஆகையால் அவர்களுடைய நியாயமாகுதலுக்கோ, பிரதிஷ்டைக்கோ அல்லது இரண்டிற்கோ அவர்கள் வெளிப்படுத்தின விசுவாச உண்மைத்துவமின்மையினால் வந்த அடிமைத்தனத்திலிருந்து அவர்களுடைய புது சிருஷ்டிகளை முடிவாகவும் முழுமையாகவும் விடுவிப்பதற்குத் திட்டமிடப்பட்ட இரண்டாம் வகையான பிரதிகூலமான அனுபவங்களைக் கர்த்தர் உபயோகிப்பார்.

*36.* கர்த்தராகிய யெஷுஆ கிறிஸ்துவின் நாளிலே அவர்களுடைய ஆவியாகிய புது சிருஷ்டி இரட்சிக்கப்படும்படி, அவர்களுடைய மாம்சத்தின் அழிவிற்காகக் கர்த்தர் அவர்களைச் சாத்தானுக்கு ஒப்புவிப்பார் *(1 கொரி. 5:1-5; 1 தீமோ. 1:19, 20). லேவி. 16:8,10,21,22* வசனங்களில் அவன் அஸாசேல் *(ASV, Rotherham* பார்க்கவும், புரட்டி கூறுபவன் *-averter,* ஒழுக்க கேடாக நடக்க தூண்டுபவன் *-perverter)* என்று அழைக்கப்படுகிறான். அவர்களுடைய தீமையான நடத்தையின் நிமித்தம் அவர்கள் சாத்தானுக்கு ஒப்புவிக்கப்படுகிறார்கள் என்று *1கொரி.5:1-5* வசனங்கள் காண்பிக்கின்றன. மேலும் அவர்கள் சத்தியத்தைத் தள்ளிவிட்டு அதற்குப் பதிலாகத் தப்பறையைப் போதிப்பதினால், சாத்தானுக்கு ஒப்புவிக்கப்படுகிறார்கள் என்று *1தீமோ. 1:19,20* வசனங்கள் காண்பிக்கின்றன. ஆசாரியர்கள் அவர்களுக்கு ஐக்கியத்தைக் கொடுக்க மறுப்பதினாலும், அவர்களைச் சகோதரர்களாகக் கருதி உதவி செய்ய மறுப்பதினாலும் அவர்கள் இந்த நிலைக்குள் செல்கிறார்கள் என்பதை இது அர்த்தப்படுத்தும். தேவன் அவர்களைத் தற்காலிகமாகக் கைவிட்டு, அவர்களுடைய மாம்ச சிந்தைகள் அழிக்கப்படும் வரை சாத்தான் அவர்களை அடிக்க அனுமதிப்பார் என்பதையும் இது அர்த்தப்படுத்தும். அவர்களுடைய மாம்ச சிந்தை அழிக்கப்படும்போது, அவர்களுடைய பரிசுத்த ஆவியாகிய புது சிருஷ்டி பாவம் சுயநலம் உலகத்தனம் தப்பறை ஆகியவற்றிற்கு அடிமையாக இருந்த நிலையிலிருந்து விடுவிக்கப்படும்.

*37.* சாத்தானானவன் அவர்களுடைய மனதை அதிகமாகவோ குறைவாகவோ தப்பறையினால் நிரப்பி, பொய்யான மதரீதியான வேலை, பொய்யான பிரச்சாரங்கள், பொய்யான மதப்பிரிவுகளைக் கட்டுவது போன்றவைகளில் அவர்களை மும்முரமாக ஈடுபடச் செய்வான். அவர்கள் பெரிய கிரியைகளைச் செய்வார்கள் என்றும், அதிக எண்ணிக்கையில் நபர்களை ஆதாயப்படுத்திக் கொள்வார்கள் என்றும், மற்றவர்களிடமிருந்து அதிக தயவை பெறுவார்கள் என்றும் நம்பும்படி அவர்களை வஞ்சிப்பான். ஆனால் இவைகள் எல்லாவற்றின் இறுதியான முடிவு பெரிய ஏமாற்றங்கள், பிரச்சனைகள், இழப்புகள், பதட்டங்கள், தோல்விகளாக மட்டுமே இருக்கும். அவர்களைப் பற்றிய இந்த காரியம் நமக்கு *சங். 107:12; மத். 7:21-23,26,27* வசனங்களில் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

*38.* சிலருடைய காரியத்தில் சாத்தான் வேறு விதமாகச் செயல்படுவான். பணம், பதவி, புகழ், செல்வாக்கு, இன்பம், அலுவல் ஆகியவைகளை அடைய வேண்டுமென்ற ஏதேனுமொரு சுயநலமான அல்லது உலகத்தனமான ஆசைக்குள் அவர்களை மூழ்கடிப்பான். ஆனால் இதுவும் அவர்களுக்குப் பெரிய ஏமாற்றங்களையும், உபத்திரவங்களையும், இழப்புகளையும், பதட்டங்களையும், தோல்விகளையும் *[1கொரி. 3:12(மரம், புல், வைக்கோல்),13,15]* கொண்டு வந்து, அவர்களுடைய ஆசைகளை அழிவுக்குள்ளாக்கும். சிலரைச் சாத்தான் சிற்றின்பங்களின் கவர்ச்சிகளினாலும், பாவத்தினால் வரும் ஆதாயங்களினாலும் தூண்டுவான். இதுவும்கூட அவர்களுக்குப் பெரிய ஏமாற்றங்கள், உபத்திரவங்கள், இழப்புகள், பதட்டங்கள் மற்றும் பாடுகளை மட்டுமே கொண்டு வரும். இவ்வாறாகச் சாத்தான் அவர்களைப் பெரிதும் வஞ்சிப்பான்.

*39.* ஊதாரி குமாரனின் காரியத்தில் நடந்ததைப் போலவே, திரள் கூட்டத்தாரின் பிரதிகூலமான அனுபவங்களினால் அவர்கள் இறுதியாகத் தங்களுடைய தவறை உணருவார்கள். மேலும் பிதாவினிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று உறுதியாகத் தீர்மானித்துச் சரியான பாதைக்குள் திரும்பவர முயற்சி செய்வார்கள். இதற்காகவே பிதா ஆவலாயிருந்தார். இதற்காகவே அவர்கள் துன்பப்படுவதையும், பிரதிகூலமான சூழ்நிலைகளையும் சாத்தானிடமிருந்து அடிகளையும் அவர் அனுமதித்திருந்

தார். அவர்கள் தாழ்த்தப்பட்டு, வருத்தத்துடன் திரும்ப வர நாடுவதைப் பிதாவானவர் தூரத்திலிருந்தே கண்டு அனுகூலமான பரிபாலனங்களுடன் அவர்களைச் சந்திக்க ஓடி வருவார். மேலும் விசுவாச உண்மைத்துவமுள்ள சிறு மந்தை அங்கத்தினர்கள் மூலம் அவருடைய வார்த்தையின் பொருத்தமான பகுதிகளை அவர்களுக்கு எடுத்துரைப்பார்.

*40.* கைகளும் கால்களும் கட்டப்பட்டு இருளான சிறைச்சாலையிலிருப்பதை போல் *(சங். 107:10)*, அவர்களுடைய பரிசுத்த ஆவியைச் சிறைப்படுத்தி இருந்த பாவம் தப்பறை சுயநலம் உலகத்தனம் ஆகியவற்றை, அவர்கள் திரும்ப வருவதற்காகச் செய்யும் பிரயாசம் படிப்படியாக அகற்றும். அவர்களுடைய விருப்பத் துணிவு கலகம் மற்றும் மூர்க்க குணத்தைக் குறித்து மிகவும் மனம் வருந்துவார்கள். ஆட்டுக்குட்டியானவர் சிந்தின ரத்தத்தின் புண்ணியத்தின் நிமித்தம் மன்னிக்கப்படுவதற்கு விசுவாசத்துடன் மன்றாடுவார்கள் *(வெளி. 7:14)*. மேலும் அவர்களுடைய பெரிய ஆபத்திலே கர்த்தரை நோக்கி கூப்பிடுவார்கள். விருப்பத் துணிவினாலும் கலகத்தினாலும் மூர்க்க குணத்தினாலும் அவர்களே தங்கள்மேல் வருவித்துக் கொண்ட ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய இக்கட்டுகள் எல்லாவற்றிலிருந்தும் கர்த்தர் அவர்களை நீங்கலாக்கி இரட்சிப்பார் *(சங். 107:13)*. கண்கட்டு போன்ற தப்பறைகள் அவர்களுக்கு உண்டாக்கின இருளிலிருந்தும், சிறைச்சாலைக்குரிய தனிமையிலிருந்தும் அவர் அவர்களை விடுவிப்பார். மேலும் அவர்களுடைய பாவங்கள், சுயநலம், உலகத்தனம் ஆகியவற்றினால் இரண்டாம் மரணத்திற்குள் செல்லக் கூடிய அபாயத்திலிருந்தும் அவர் அவர்களை விடுவிப்பார். மேலும் அவர்களுடைய உருவகமாகப் புயங்களையும், கைகளையும், கால்களையும், பாதங்களையும் கட்டுவதற்கு இந்த தீமைகள் உபயோகித்த கெட்ட பழக்கங்கள் என்னும் கட்டுகளை அறுப்பார் *(சங். 107:14)*.

*41.* மேலும் அவர்களுடைய உருவகமான பட்டணங்களுக்குள் (மதப்பிரிவுகள் மற்றும் அவைகளின் கிளைகள்)அவர்களைப் பிரவேசிக்கச் செய்த உருவகமான கதவுகளாக இருந்த பொய்யான போதகர்களை அகற்றுவார். அவர்களை அவர்களுடைய மதப்பிரிவுகளில் சிறைப்படுத்தி வைப்பதற்கு இந்த பொய்யான போதகர்கள் இரும்புத் தாழ்ப்பாள்களைப் போல் உபயோகித்த போதனைகளையும் ஏற்பாடுகளையும் அவர் அழிப்பார் *(சங்.107:16)*. இவ்வாறாக அவர்களை விடுவிக்கும் இந்த செயல்களின் மூலம் அவர்களுடைய புது ஆவிக்குரிய மனம் இருதயம் மற்றும் சித்தமாகிய அவர்களுடைய பரிசுத்த ஆவியைத் (அவர்களிலுள்ள தேவனுடைய மனஇயல்பு) தேவன் விடுவித்திருப்பார். இப்போது அவர்களுடைய மனம் இருதயம் மற்றும் சித்தம், அவர்களிலுள்ள தீமையை அடக்கி வைப்பவைகளாகவும், நன்மையை அபிவிருத்தி செய்பவைகளாகவும் அவைகளுக்குரிய சரியான நிலைக்குள் திரும்ப வரும். இவ்வாறாக அவர்கள் விசுவாசமில்லாதவர்களாக மாற தொடங்குவதற்கு முன் பரிசுத்த ஆவி அவர்களில் எவ்வாறு ஆளுகை செய்ததோ, இப்போது அவர்கள் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக ஆகும்போதும், விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக நீடித்திருக்கும் போதும் அவ்வாறே ஆளுகை செய்யும்.

## *5.* அவர்கள் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக நீடித்திருக்கும் போது அவர்களிலுள்ள பரிசுத்த ஆவி

*42.* இறுதியாக நாம், அவர்கள் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக நீடித்திருக்கும் போது அவர்களிலுள்ள பரிசுத்த ஆவியைக் கருத்தில் கொள்வோம். அவர்களுக்கு நேரிட்டிருந்த அனுகூலமற்ற அனுபவங்களினால் அவர்கள் மூர்க்க குணம், விருப்பதுணிவு, பாவம், தப்பறை, சுயநலம், உலகத்தனத்தினால் உண்டான கலகம் ஆகியவற்றை முற்றிலும் அருவருப்பார்கள். அவர்களில் இருமனப் போக்கை உருவாக்கி இருந்த இந்த காரியங்களை அவர்கள் நித்தியத்திற்கும் விட்டு விடுவார்கள். இது முதல், அவர்களிலுள்ள தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவியானது, மாம்சத்திலும் ஆவியிலுமுண்டான எல்லா அசுசியும் நீங்க அவர்களைச் சுத்திகரித்து, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்த அவர்களுக்குத் திராணி அளிக்கும் *(2கொரி. 7:1)*.

*43.* அவர்கள் அவர்களுடைய பலியின் உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொண்டு, அவர்களிலுள்ள தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவியைக் கொண்டு சுயத்திற்கும் உலகத்திற்கும் மரித்து, தேவனுக்கென்று ஜீவிப்பார்கள். இவ்வாறாக சுயவெறுப்பையும் உலக வெறுப்பையும் அப்பியாசிக்க அவர்களுடைய பரிசுத்த ஆவி அவர்களுக்குத் திராணி அளிக்கும். சத்தியத்தை விசுவாச உண்மைத்துவத்துடன் தியானிப்பதற்கும் அதைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்வதற்கும், தப்பறைகள் எவ்விடத்திலிருந்து வந்தாலும் அவைகளை முற்றிலும் நிராகரிப்பதற்கும் பரிசுத்த ஆவி அவர்களுக்குத் திராணி அளிக்கும். அவர்களுடைய பரிசுத்த மனம், இருதயம் மற்றும் சித்தத்தைக் கொண்டு அவர்கள் தங்களுடைய மனஇயல்புகள், நோக்கங்கள், சிந்தனைகள், வார்த்தைகள், கிரியைகள், சூழ்நிலைகள் அவர்கள்மேல் செயல்படுகிற மற்றும் அவர்களிடமிருந்து புறப்படுகிற தாக்கங்கள் ஆகியவற்றை விசுவாச உண்மைத்துவத்துடன் ஆராய்வார்கள். மேலும் எல்லா தீமைக்கெதிராகவும் எல்லா நன்மைக்கு ஆதரவாகவும் விழித்திருந்து தங்களைக் காத்துக் கொள்வார்கள். அவர்களுடைய பரிசுத்த மனம் இருதயம் மற்றும் சித்தம் ஜெபத்தின் ஆவியையும் அப்பியாசித்தலையும் வளர்த்துக் கொள்ளும். கர்த்தரும் அவர்களுடைய ஜெபத்தை அனுகூலமாகக் கருத்தில் கொண்டு அதற்குப் பதிலளிப்பார். அவர்களுடைய மனம் இருதயம் மற்றும் சித்தத்திலுள்ள அதே பரிசுத்த ஆவி அவர்களைச் சத்தியத்திற்கு விசுவாச உண்மைத்துவமுள்ள சாட்சிகளாக்கும். விசேஷமாக அவர்கள் வரவிருக்கும் ராஜ்யத்தைக் குறித்தும், சபை முழுமையடைந்திருப்பதைக் குறித்தும் சாட்சி கூறுவார்கள் *(வெளி. 19:6-8)*.

*44.* எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களுடைய புது சிருஷ்டியின் மனம் இருதயம் மற்றும் சித்தமானது, அதாவது அவர்களிலுள்ள தேவனுடைய மனஇயல்பாகிய பரிசுத்த ஆவியானது, பரத்துக்குரிய பற்றுதல்களையும், உயர்நிலை முதன்மை குணநலன்களையும், தாழ்நிலை முதன்மை குணநலன்களையும், இரண்டாம் நிலை குணநலன்களையும், மூன்றாம் நிலை குணநலன்களையும் வளர்த்துக் கொள்ள அவர்களுக்கு திராணி அளிக்கும். அதே நேரத்தில் அவர்களுடைய தாழ்நிலை முதன்மை

பற்றுதல்கள் மற்றும் குணநலன்களை, சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தத்தின் ஊழியக்காரர்களாக உபயோகிக்கும் திராணியைப் பரிசுத்த ஆவி அவர்களுக்கு அளிக்கும். உயர்நிலை முதன்மை குணநலன்களைக் கட்டுப்படுத்தும்படி, தாழ்நிலை முதன்மை குணநலன்கள் செய்யும் முயற்சிகளை அடக்கி வைக்க பரிசுத்த ஆவி அவர்களுக்குத் திராணி அளிக்கும். இந்த காரியங்களை இன்பமான மற்றும் இன்பமற்ற, எளிதான மற்றும் கடினமான, அனுகூலமான மற்றும் பிரதிகூலமான, ஏற்புடைய மற்றும் ஏற்பில்லாத அனுபவங்கள் எல்லாவற்றின் மத்தியில் செய்ய இதே பரிசுத்த ஆவி அவர்களுக்குத் திராணி அளிக்கும். தேவ சாயலிலும் கிறிஸ்துவின் சாயலிலும் அவர்களுடைய குணாம்சங்களைப் பலப்படுத்தி, சமச்சீர்ப்படுத்தி, படிகப்படுத்த இது அவர்களுக்கு உதவும். தேவனுடைய திட்டங்களிலும் நோக்கங்களிலும் வருங்காலத்தில் அவர்கள் நித்தியத்திற்கும் இருக்க போகிற நிலைகளை அடைய இது அவர்களைத் தகுதிப்படுத்தும். அவர்களுடைய புது சிருஷ்டியின் மனம், இருதயம் மற்றும் சித்தம் இந்த காரியங்களைச் செய்யும் போது, கிரீடத்தை இழந்தவர்களிலுள்ள பரிசுத்த ஆவியானது அவர்களிலுள்ள தேவனுடைய மனஇயல்பாகும் என்பதை நிரூபிக்கும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

# மாம்ச இஸ்ரயேல் ஆவிக்குரிய இஸ்ரயேலை அடையாளப்படுத்துகிறது

*PT #111 Feb 1928 pp 18-30*

*1.* **மா**ம்ச இஸ்ரயேலானது அதின் பல்வேறு நிலைகளில், அதிலிருந்து தனிப்பட்ட ஒரு நிறைவேறுதலான ஜனத்தை அடையாளப்படுத்துகிறதென்று தேவன் சொல்கிறார். இஸ்ரயேலின் பூமிக்குரிய நிலைகளுக்கு இணையாக அந்த நிறைவேறுதலான ஜனத்திற்கு ஆவிக்குரிய நிலைகள் இருக்கும். மேலும் யோர்தான் (கர்த்தரின் ஞானஸ்நானம்) மற்றும் பெந்தெகொஸ்தே முதற்கொண்டு இக்காலம் வரை இந்த நிஜ நிறைவேறுதலான இஸ்ரயேலர்கள் மட்டுமே தேவனுடைய ஜனங்களாக இருக்கிறார்கள். மாம்ச இஸ்ரயேலர்களின் அடையாளங்கள் யோர்தான் மற்றும் பெந்தெகொஸ்தேயிலிருந்து தொடர்ந்து வாழ்ந்த உண்மையான அல்லது பெயரளவிலான தேவனுடைய ஜனங்களுக்குப் (கிறிஸ்தவர்களுக்கு) பொருந்தும்.

*2.* 1கொரி *10:1-14* வசனங்களில் குறிப்பிடப்பட்ட பெயரளவிலான மற்றும் உண்மையான மாம்ச இஸ்ரயேலர்கள், யுகங்களின் முடிவுகளாகிய அறுவடை காலங்களில் வாழ்ந்த பெயரளவிலான மற்றும் உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலை (கிறிஸ்தவர்களை) அடையாளப்படுத்துகிறது என்று பரிசுத்த பவுல் காண்பிக்கிறார், "இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாக (அடையாளங்களாக – *types*)) இருக்கிறது" *(1*கொரி *10:6)*. "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக (அடையாளங்களாக) அவர்களுக்குச் சம்பவித்தது, (ஆனால்) யுகங்களின் (யூத மற்றும் சுவிசேஷ யுகங்கள்) முடிவுகளிலுள்ள (அறுவடைகள் –மத். *13:39)* நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" *(1*கொரி *10:11)*.

*3.* இவ்வசனங்களில் "நமக்கு" என்பதில், மற்றவர்களுடன், பரிசுத்த பவுலும், விசுவாச உண்மைத்துவமுள்ள கொரிந்து சகோதரர்களும், எங்குமுள்ள விசுவாச உண்மைத்துவமுள்ள மற்ற சகோதரர்களும் இருக்கிறார்கள். இவர்களைக் கர்த்தராகிய யெஷுஆவுடன் *"The"* கிறிஸ்து *(The Christ)* என்று பரிசுத்த பவுல் அழைக்கிறார். ஆனால் கர்த்தராகிய யெஷுஆவுடன் அல்லாமல், தனியாக அவர்களைக் குறிப்பிடும் போது, இந்த நிருபத்தில் அவர்களைக் கிறிஸ்துவின் சரீரமென்று அழைக்கிறார். இவர்களே "மறைக்கப்பட்ட ரகசிய" வகுப்பாராயிருக்கிறார்கள் *(1*கொரி. *12:12-14,27)*. இந்த அடையாளங்களில், உண்மையான மாம்ச இஸ்ரயேலர்கள் செய்த காரியங்கள் இரு அறுவடைகளில் உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் செய்யும் காரியங்களை அடையாளப்படுத்தும். பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்கள் செய்யும் காரியங்கள், இரு அறுவடைகளில் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் செய்ததை அடையாளப்படுத்தும்.

*4.* *1* கொரி. *10:6-10* வரையுள்ள வசனங்களில், அடையாளத்தில் பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்கள் செய்த ஐந்து பொல்லாத காரியங்கள் ஒவ்வொரு அறுவடையின் ஐந்து அறுவடை கொழித்தல்களில் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் செய்யும் ஐந்து பொல்லாத காரியங்களை அடையாளப்படுத்துகிறது. மேலும் உண்மையான மாம்ச இஸ்ரயேலர்கள் செய்த நல்ல காரியங்கள் *(1*கொரி. *10:1-5)*, இந்த அறுவடை காலங்கள் முழுவதும் உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் செய்யும் நல்ல காரியங்களை அடையாளப்படுத்தும். இவ்வாறாகப் பவுல் அப்போஸ்தலர் இஸ்ரயேலர்களின் இந்த வனாந்தர அனுபவங்களின் நிஜ நிறைவேறுதலை இரு அறுவடைகளுக்கும் பொருத்துகிறார்.

*5.* எபி. *3*-ம் மற்றும் *4*-ம் அதிகாரங்களில் பரிசுத்த பவுல் யூதர்களின் வனாந்தர அனுபவங்களை நிஜ நிறைவேறுதலில் சுவிசேஷ யுகம் முழுவதற்கும் பிரயோகிக்கிறார். எபி. *3:7* மற்றும் *13*-ம் வசனங்களில் "இன்று" என்பது சுவிசேஷ யுகத்தைக் குறிக்கிறது [ரோம. *8:35* (எந்நேரமும் என்பது "நாள் முழுவதும்" என்று இருக்க வேண்டும் – *all the day long); 2* கொரி. *6:2;* எபி. *13:8)*. எபி. *3:1,2,6,14* வசனங்களில் விசுவாச உண்மைத்துவமுள்ள சகோதரர்கள் கிறிஸ்து வகுப்பாராக அதாவது கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாக (கூட்டாளிகள், கிறிஸ்துவின் பகுதிகள் - மறைக்கப்பட்ட ரகசிய வகுப்பார்) இருக்கிறார்கள் என்று அவர் காண்பிக்கிறார். மேலும் அவர்கள் விசுவாச உண்மைத்துவமுள்ள மாம்ச இஸ்ரயேலர்களின் நிஜ நிறைவேறுதல்களாக இருக்கிறார்கள் என்றும் நமக்குச் சொல்கிறார். கிறிஸ்து வகுப்பாரைச் சேர்ந்த இந்த விசுவாச உண்மைத்துவமுள்ள சகோதரர்களைக் குறித்து கூடுதலான போதனையையும் கொடுக்கிறார். இவ்வாறாக எபி. *4:1,3,6,9-11* வசனங்கள், உண்மையான மாம்ச இஸ்ரயேலர்கள் வனாந்தர பிரயாணத்தில் செய்த நல்ல காரியங்களைக் குறிப்பிடுகின்றன. இவைகள் சுவிசேஷ யுகம் முழுவதிலும் உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் வெளிப்படுத்தின விசுவாச உண்மைத்துவமுள்ள நடத்தையை அடையாளப்படுத்துகின்றன.

*6.* 1கொரி *10:6-11* வசனங்களில் பரிசுத்த பவுல் செய்ததை அறிவித்ததைப் போலவே, எபி. *3:8-13, 15-19* மற்றும் எபி. *4:2,3,6,8* வசனங்களில் அவர் பெயரளவிலான

மாம்ச இஸ்ரயேலர்கள் வனாந்தரத்தில் செய்த பொல்லாத கிரியைகள், சுவிசேஷ யுகத்தில் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் செய்த பொல்லாத கிரியைகளை அடையாளப்படுத்துவதாக நமக்குச் சொல்கிறார். மேலும் அதை உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு அறிவுறுத்தும் எச்சரிக்கையாகவும் உபயோகிக்கிறார். ஆகை யால் நாம் ஐந்து அடையாளமான கொழித்தல் களை, அதே வரிசையில், இரு அறுவடைகளுக்கிடையில் நிகழ்ந்த சுவிசேஷ யுகத்தின் ஐந்து பெரிய கொழித்தல் களுக்குப் பொருத்துகிறோம். இந்த ஐந்து கொழித்தல்கள் ஒவ்வொன்றும், எபேசு மற்றும் லவோதிக்கேயா சபை களின் கால கட்டங்களுக்கிடையில் வாழ்ந்த சபையின் ஐந்து கால கட்டங்கள் ஒவ்வொன்றிலும் நிகழ்ந்தன. எபேசு மற்றும் லவோதிக்கேயா சபையின் கால கட்டங் கள் இரு அறுவடைகளின் காலங்களாக இருக்கின்றன. அந்த அறுவடை காலங்கள் ஒவ்வொன்றிலும் கூட இந்த ஐந்து கொழித்தல்கள் நிகழ்ந்தன. எபேசு சபை காலத்தில் நடந்த ஐந்து கொழித்தல்கள் லவோதிக்கேயா சபை காலத்தில் நடந்த ஐந்து கொழித்தல்களுக்கு இணையான சம்பவங்களாக இருக்கின்றன. இவைகள் வனாந்தரத்தில் நடந்த ஐந்து கொழித்தல்களுக்கு நிஜ நிறைவேறுதல் களாக இருந்தன.

*7.* இவ்வாறாகச் சபையின் சிமிர்னா கால கட்டத்தில் "ஈடுபலியை மறுதலித்தல்" *(No-Ransomism)* என்ற ஒரு பெரிய கொழித்தல் நிகழ்ந்தது. இந்த காலத் தில் வந்த மனுஷ சாவாமை, மரித்தோர் உணர்வோடிருத் தல், நித்திய நரக வேதனை, திரித்துவம் *(3x1=1)* போன்ற தப்பறைகள் மீட்கும் பலி புண்ணியம் ஒரு ஈடுகிரயமாக இருக்கிறது என்ற சத்தியத்தைக் கருத்து ரீதியாக நிராகரித்தன.

*8.* அதுபோலவே பெர்கமு சபை கால கட்டத்தில் "உண்மைத்துவமின்மை" *(Infidelism)* என்ற ஒரு பெரிய கொழித்தல் நிகழ்ந்தது. அதில் சபை அரசாங்கத்தோடு இணைந்து, சபை மற்றும் உலகத் தாருக்குத் தேவன் அளித்த உண்மையான நம்பிக்கையை இழந்து, விசுவாசிக்கக் கூடாத மற்றொரு நம்பிக்கையை அதற்குப் பதிலாக உருவாக்கினது. இவ்வாறாகச் சபைக் கும் உலகத்திற்கும் வேறொரு செய்தியைப் பிரசங்கித்தது. சுவிசேஷ யுக அறுவடை காலத்தில், இதற்கிணையான அறுவடை கொழித்தலில் பேட்டன் என்பவரும், அவரைத் தொடர்ந்து மற்றவர்களும் அவ்வாறே செயல் பட்டார்கள்.

*9.* மேலும் சபையின் தியத்தீரா காலத்தில் "கலப்பட சேர்க்கை" *(combinationism)* என்ற ஒரு பெரிய கொழித்தல் நிகழ்ந்தது. அந்த காலத்தில் சபையானது, சபையிலும், அரசாங்கத்திலும், உலகத்திலும் மேலாதிக் கம் செய்யும் வல்லமையாக ஆகுமளவிற்குப் போப்பு மார்க்க படிநிலை அமைப்பானது சபையோடும் அரசாங் கத்தோடும் இணைந்தது. மேலும் பொதுவாகச் சபை, அரசாங்கம், உலகம் ஆகியவற்றிற்கு இடையில் எல்லா வித பொல்லாத இணைப்புகளை உருவாக்கினது.

*10.* அதுபோலவே சபையின் சர்தை கால கட்டத்தில் "சீர்த்திருத்தல்" *(Reformism)* என்ற ஒரு பெரிய கொழித்தல் நிகழ்ந்தது. சபையின் தலைமைத்துவத்தையும் அங்கத்தினர்களையும் சீர்த்திருத்துவதற்கு எல்லா வகை யான குறுக்கு வழி முயற்சிகளும் செய்யப்பட்டன. மற்ற காரியங்களுடன் இது அந்த காலத்தில் மூன்று பெரிய சீர்த்திருத்த குழுக்கள் உருவாக்கப்படும் படி செய்தது. அவைகள் பிசா *(Pisa)*, கான்ஸ்டன்ஸ் *(Constance)*, பேசில் *(Basel)* என்ற இடங்களில் நடந்த மூன்று பெரிய குழுக் களாக இருந்தன.

*11.* அதுபோலவே பிலதெல்பியா சபை கால கட்டத்திலும் "முரண்பாடு" *(Contradictionism)* என்ற ஒரு பெரிய கொழித்தல் நிகழ்ந்தது. இது அந்த காலத்தில் *1517-1874* வரையுள்ள காலத்தில் மதப்பிரிவுகளின் மூலம் நடந்த மறுமலர்ச்சி சம்பந்தப்பட்டதாக இருந்தது. ஒவ் வொரு மறுமலர்ச்சியை உண்டு பண்ணின பரிசுத்தவான் களும், கிரீடத்தை இழந்த ஒவ்வொரு பிரபுவும், அவர்கள் கொடுத்த சத்திய போதனைகளில், பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்களினால் எதிர்க்கப்பட்டார்கள்.

*12.* இந்த மூன்று கால கட்டங்கள், அதாவது இரு அறுவடை காலங்கள் மற்றும் அவைகளுக்கிடைப்பட்ட காலம் என்ற மூன்று காலங்களில், விசுவாச உண்மைத் துவமுள்ளவர்கள் மற்றும் விசுவாச உண்மைத்துவமில்லா தவர்கள் சம்பந்தப்பட்ட காரியங்களின் இசைவிணக்கம் அடையாளப்படுத்தப்பட்டதைக் கவனியுங்கள். இது வனாந்தர அனுபவத்தின் நிஜ நிறைவேறுதலின் மூன்று வகையான நிறைவேறுதலைக் காண்பிக்கிறது.

*13.* இதுவரை நாம் இதைப் பற்றிய பொதுவான கருத்துக்களை மட்டுமே பார்த்தோம். இப்போது, இரு இஸ்ரயேலர்கள் என்பதும், மாம்ச இஸ்ரயேல் ஆவிக்குரிய இஸ்ரயேலை அடையாளப்படுத்துகிறது என்பதும் வேதா கம அடிப்படையுள்ளது என்பதைத் தெளிவாக நிரூபிக் கும் சில விவரங்களைக் கருத்தில் கொள்வோம். அடை யாளங்கள் மற்றும் நிஜ நிறைவேறுதல்களுக்கிடை யிலுள்ள இணையை எடுத்துரைப்போம். யாக்கோபு மற்றும் கர்த்தராகிய யெஷுஆ, அடையாளம் மற்றும் நிஜ நிறைவேறுதலாக, இந்த இரு இஸ்ரயேலர்களை ஸ்தாபித் தவர்களாக இருந்தார்கள். யாக்கோபு அவருடைய பன்னிரண்டு குமாரர்களின் மூலம் அவருடைய தேசத்தை

ஸ்தாபித்தார். கர்த்தராகிய யெஷுஆ அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் மூலம் அவருடைய தேசத்தை ஸ்தாபித்தார்.

*14.* பெயரளவிலான மற்றும் உண்மையான மாம்ச இஸ்ரயேலில் பன்னிரண்டு கோத்திரங்கள் இருந்தன. பெயரளவிலான மற்றும் உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலில் கிறிஸ்தவ மண்டலத்தின் பன்னிரண்டு பொதுவான மதப்பிரிவுகள் இருந்தன. ஆவிக்குரிய இஸ்ரயேலின் இந்த பன்னிரண்டு கோத்திரங்களில் உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் இருந்தார்கள் (வெளி. 7:4-8). பெயரளவிலான கோத்திரங்கள் மற்றும் கிறிஸ்தவ மதப்பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கிடையிலுள்ள இணை இவ்வாறாயிருக்கிறது: (1) ரூபன் - கிரேக்க கத்தோலிக்கர்கள் *(Greek Caholic)*, (2) சிமியோன் - ரோமன் கத்தோலிக்கர்கள் *(Roman Catholic)*, (3) எப்பிராயீம் - லூத்தர் மதப் பிரிவை சேர்ந்தவர்கள் *(Lutheran* கால்வின்), (4) யூதா - மதப்பிரிவை சேர்ந்தவர்கள் *(Calvinists)*, (5) தாண் – பேப்டிஸ்ட் *(Baptists)*, (6) நப்தலி - யூனிடேரியோ யூனிவர்ஸ்சலிஸ்ட்ஸ் மதப்பிரிவை சேர்ந்தவர்கள் *(Unitario-unioversalists)*, (7) காத் - எப்பிஸ்கோப்பல் மதப்பிரிவை சேர்ந்தவர்கள் *(Episcopalians)*, (8) ஆசேர் - மெத்தடிஸ்ட் மதப்பிரிவை சேர்ந்தவர்கள் *(Methodists)*, (9) இசக்கார் - கிறிஸ்டியன் (டிசைப்பில்ஸ்) மதப்பிரிவை சேர்ந்தவர்கள் *[Christian (Disciples)]*, (10) செபுலோன் - அட்வென்டிஸ்ட் மதப்பிரிவை சேர்ந்தவர்கள் *(Adventists)*, (11) மனாசே - காங்கிரிகேஷனலிஸ்ட்ஸ் மதப்பிரிவை சேர்ந்தவர்கள் *(Congregationalists)*, (12) பென்யமீன் – குவேக்கர் *(Quakers)*, ஹோலினஸ் பீப்பிள் *(Holiness People)* போன்ற மத ஆர்வமுள்ள மதப்பிரிவை சேர்ந்தவர்கள். இவைகள் மட்டுமல்ல, மாம்ச இஸ்ரயேலின் இந்த கோத்திரங்களின் முக்கியமான பிரிவுகளும் (எண். 26), இந்த மதப்பிரிவுகளின் முக்கியமான பிரிவுகளுக்கு இணையாயிருக்கின்றன. விவரங்களுக்காக *PT 1923*, பக் *117-123* பார்க்கவும்.

## லேவியர்கள் - அடையாளம் நிஜ நிறைவேறுதல்

*15.* மாம்ச இஸ்ரயேலர்களுக்கு லேவி கோத்திரம் ஒரு பரிசுத்த கோத்திரமாக இருந்தது (அவர்கள் பன்னிரண்டு கோத்திரங்களைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படாதிருந்தார்கள். பன்னிரண்டு கோத்திரங்களில் லேவி மற்றும் யோசேப்புக்குப் பதிலாக, யோசேப்பின் இரு குமாரர்களாகிய எப்பிராயீம் மற்றும் மனாசேயின் சந்ததியார் இரு தனி கோத்திரங்களாக கருதப்பட்டார்கள்). ஆவிக்குரிய இஸ்ரயேலர்களிலும் அவர்களுடைய பரிசுத்த கோத்திரமாக, விசுவாசத்தினால் நியாயமாக்கப்பட்டவர்கள் இருந்தார்கள். மாம்ச இஸ்ரயேலர்களிலுள்ள லேவியர்களைப் போலவே, ஆவிக்குரிய இஸ்ரயேலில் விசுவாசத்தினால் நியாயமாக்கப்பட்டவர்கள் பன்னி - ரண்டு மதப்பிரிவுகளின் மத்தியிலிருந்தார்கள். மாம்ச இஸ்ரயேலர்களின் ஆசாரியத்துவம் ஆரோன் மற்றும் அவருடைய குமாரர்களைக் கொண்டதாக இருந்தது. அவர்களும் மாம்ச இஸ்ரயேலர்களின் மத்தியிலிருந்தார்கள். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் ஆசாரியத்துவம் கர்த்தராகிய யெஷுஆவையும் அவருடைய விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களையும் கொண்டதாக இருந்தது. அவர்களும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் மதப்பிரிவுகளின் மத்தியிலிருந்தார்கள். மாம்ச இஸ்ரயேலர்களின் ஆசாரியத்துவம் மாம்சத்திற்குரியதாக இருந்தது. ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் ஆசாரியத்துவம் ஆவிக்குரிய ஒன்றாக இருந்தது (எபி. *3: 1; 9: 14; 1* பேது. *2: 5, 9, 10*). மாம்ச இஸ்ரயேலர்கள் மிருக பலிகளைக் கொண்டு வந்தார்கள். ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தங்களுடைய மனுஷீகத்தை பலி செய்தார்கள்.

*16.* மாம்ச இஸ்ரயேலர்களிடம் பூமிக்குரிய ஆசரிப்புக்கூடாரம் இருந்தது. ஆவிக்குரிய இஸ்ரயேலர்களிடம் ஆவிக்குரிய ஆசரிப்புக் கூடாரம் இருந்தது. மாம்ச இஸ்ரயேலர்களிடம் அடையாளமான பலி பீடங்கள், தண்ணீர் தொட்டி, குத்துவிளக்குகள், சமுகத்தப்ப மேஜை, உடன்படிக்கை பெட்டி, அதின் கேரூபீன்கள் மற்றும் மகிமையான ஒளி, ஊரீம் மற்றும் தும்மீம் இருந்தன. ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்குக் கிறிஸ்துவின் மனுஷீகம் முதலாம் பலிபீடமாகவும் (தாமிர பலிபீடம்), மற்ற சகோதரர்களுக்கு ஆறுதலளிக்கும் அலுவலில் அவர்களுடைய புது சிருஷ்டிகள் இரண்டாம் பலிபீடமாகவும் (பொற் தூப பீடம்) இருந்தன. பழைய ஏற்பாடு அவர்களுடைய தண்ணீர் தொட்டியின் பாதமாகவும் புதிய ஏற்பாடு அதின் தொட்டியாகவும் இருந்தன. மேலும் சத்தியம் அவர்களுடைய நிஜ நிறைவேறுதலான தண்ணீராக இருந்தது. பிரகாசிப்பிப்பவர்கள் என்ற அலுவலில் கிறிஸ்து வகுப்பாரின் புது சிருஷ்டிகள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் குத்துவிளக்காக இருந்தார்கள். நிஜ நிறைவேறுதலான அப்பமாகிய சத்தியத்தின் மூலம் அவர்களை ஒவ்வொரு நல்வார்த்தையிலும் கிரியையிலும் பலப்படுத்துபவர்களாகச் செயல்பட்ட சபை வகுப்பார் அவர்களுடைய மேஜையாக இருந்தார்கள். மகிமையிலுள்ள கிறிஸ்து வகுப்பார் உடன்படிக்கை பெட்டியாகவும், தெய்வீக நீதி அதின் கிருபாசனமாகவும், தெய்வீக வல்லமை மற்றும் அன்பு அதின் கேரூபீன்களாகவும், ஞானமாக இருக்கிற யாவே தேவன் அதின் ஷெக்கீனாவாகவும் இருந்தன. தெய்வீக போதனைகள் மற்றும் இயல்புகள் அவர்களுடைய ஊரீமாகவும் தும்மீமாகவும் இருந்தன.

*17.* மாம்ச இஸ்ரயேலர்களின் ஆசரிப்புக் கூடாரத்தில் பலி பீடங்கள், குத்து விளக்கு மற்றும் மேஜை ஆகியவைகளுக்கு நான்கு வகையான பாத்திரங்கள் பல எண்ணிக்கையிலிருந்தன. அவைகள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் கோட்பாடு ரீதியான *(doctrinal)*, சீர்த்திருத்தலுக்கேதுவான *(correctional)*, தப்பறையை நிராகரிக்கும் *(refutational)* மற்றும் ஒழுக்க ரீதியான *(ethical)* போதனைகளுக்கும் இணையாக இருந்தன. இதற்குக் கூடுதலாக அடையாளமான பலிபீடங்களில் தூப கலசங்களும் இருந்தன. ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் ஆசாரியர்கள் அவர்களுடைய ஊழியத்தில் உபயோகிக்கும் வேத வசனங்களுக்கு இவைகள் இணையாயிருக்கின்றன. மாம்ச இஸ்ரயேலர்களின் வாசஸ்தலம் பஞ்சு நூலால் செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலாக ஆட்டு மயிராலான வெண்மையான கூடாரம் அதை மூடினது. இந்த மூடி சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடா தோலினால் மூடப்பட்டிருந்தது. அதின் மேல் தகசுத்தோலினாலான ஒரு மூடி இருந்தது. ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் வாசஸ்தலமானது அவர்களுடைய நியாயமாக்கப்பட்ட மனுஷீகத்தில் (ஆட்டு மயிராலான வெண்மையான கூடாரம்) மறைக்கப்பட்டிருந்த புதுசிருஷ்டிகளைக் (பஞ்சு நூலாலான வாசஸ்தலம்) கொண்டதாக இருந்தது. அந்த நியாயமாக்கப்பட்ட மனுஷீகம் மீட்கும் பலியினால் (சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்) மூடப்பட்டிருந்தது. அந்த வாசஸ்தலம் சுவிசேஷ யுகம் முழுவதும் உலகத்தாருக்கு அருவருப்பாகத்

தோன்றினது (நிஜ நிறைவேறுதலான தகசுத்தோல்).

*18.* இஸ்ரயேலின் ஆசரிப்புக் கூடாரமானது, பலகைகள், தூண்கள் மற்றும் தாழ்ப்பாள்களால் நிலை நிறுத்தப்பட்டிருந்தது. சில தாழ்ப்பாள்கள் ஒன்று மற்றொன்றோடு இணைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு இணைக்கப்பட்டிருந்த தாழ்ப்பாள்களைப் பலகைகள் மற்றும் தூண்களோடு சேர்த்துக் கணக்கிடும் போது அதின் தொகை அறுபத்தாறு ஆகும். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் வாசஸ்தலம் வேதாகமத்தின் அறுபத்தாறு புத்தகங்களால் நிலை நிறுத்தப்பட்டிருந்தது.

*19.* இஸ்ரயேலர்களின் ஆசரிப்புக் கூடாரத்தில் ஒரு பிராகாரம் இருந்தது. லேவியர்கள் அதற்குள் வர அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். அந்த பிராகாரத்தைச் சுற்றி பஞ்சு நூலாலான மூடுதிரை இருந்தது. ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் ஆசரிப்புக் கூடாரத்திலும் நியாயமாக்கப்பட்ட நிலை என்னும் ஒரு பிராகாரம் இருந்தது. நியாயமாக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் நீதியினால் சூழப்பட்டவர்களாக அந்த நிலையில் நின்றார்கள். பிராகாரத்தின் வாசல் மூடுதிரையிலிருந்து வேறுபட்ட ஒன்றாக இருந்தது. அதை கணக்கிடாமல் பிராகாரத்தின் மூடுதிரையின் நீளத்தை அளவிடும்போது, அது *7000* பரிசுத்த பிரமீடு அங்குலங்களாக *(sacred Pyramid Inches)* இருந்தது. வீழ்ச்சியிலிருந்து *7000* வருடங்கள் வரையுள்ள காலத்தில் செய்யப்பட்ட ஆதாமினால் வந்த பாவங்களுக்குக் கிறிஸ்துவின் நீதி பயனுள்ளதாக இருக்கும் என்பதை அடையாளப்படுத்துகிறது. அதாவது ஆதியில் ஏதேனில் செய்யப்பட்ட பாவத்திற்கு *7000* வருடங்களுக்குப் பிறகும், அக்டோபர் *1874*-ல் நிகழ்ந்த கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு *1000* வருடங்களுக்குப் பிறகும், மத்தியஸ்தரின் சிங்காசனத்தின் வேலை முடிவடைந்து அது நீக்கப்பட்டிருக்கும். அதற்குப் பிறகு, இரக்கத்தினால் மட்டுப்படுத்தப்படாத முழுமையான நீதி சம்பந்தமாக மனுகுலத்திற்கு அளிக்கப்படும் இறுதியான பரீட்சை *2874*-ல் தொடங்கும்.

*20.* இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களும் பாளயத்திலிருந்தார்கள். சுவிசேஷ யுகத்தில் பல்வேறு மதப்பிரிவுகளிலுள்ள பெயரளவிலான தேவ ஜனங்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலின் பாளயமாக இருந்தார்கள். ஒப்புரவாகுதலின் நாளின் பாவ நிவாரண பலிகளின் உடல்கள் பாளயத்திற்குப் புறம்பே சுட்டெரிக்கப்பட்டன. கிறிஸ்து வகுப்பாரின் மனுஷீகமும் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களால் புறம்பே தள்ளப்பட்டு, ஐக்கியத்திலிருந்து விலகப்பட்டதாகவும், சட்ட பாதுகாப்பற்றதாகவும் மரணத்திற்கு ஒப்புவிக்கப்பட்டது. பிராகார வாசல் நம்முடைய நீதியாகக் கிறிஸ்துவை அடையாளப்படுத்துகிறது. முதலாம் திரை கிறிஸ்து வகுப்பாரின் மனுஷீக சித்தத்தின் மரணத்தையும், இரண்டாம் திரை அவர்களுடைய மாம்சத்தின் மரணத்தையும் அடையாளப்படுத்துகின்றன. பரிசுத்தம் கிறிஸ்து வகுப்பாரின் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட நிலையையும், மகா பரிசுத்தம் ஆவியில் பிறந்த அவர்களுடைய நிலையையும் அடையாளப்படுத்துகின்றன.

*21.* லேவியர்களிலும் விரிவான பல அடையாளங்களை நாம் காண்கிறோம். விசுவாசத்தினால் நியாயமாக்கப்பட்டவர்கள் லேவியர்களின் சுவிசேஷ யுக நிஜ நிறைவேறுதலாக இருக்கிறார்கள். லேவியர்கள் மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். அந்த வகுப்பார்கள் கோகாத்தியர்கள், மெராரியர்கள் மற்றும் கெர்சோனியர்களாக இருந்தார்கள். இந்த மூன்று வகுப்பார்களும் ஆவிக்குரிய இஸ்ரயேலின் ஆசாரியத்துவத்திற்கும் ஜனங்களுக்கும் மூன்று வகைகளில் ஊழியஞ் செய்த விசுவாசத்தினால் நியாயமாக்கப்பட்டவர்களுக்கு இணையாக இருந்தார்கள். அந்த மூன்று வகையான வேலைகளாவன: *(1)* ஆசாரிய வகுப்பாருக்கும் ஜனங்களுக்கும் அறிவு ரீதியான படைப்புகளையும் விரிவுரைகளையும் ஏற்பாடு செய்வது (நிஜ நிறைவேறுதலான கோகாத்தியர்கள்), *(2)* இந்த அறிவு ரீதியான படைப்புகளை உற்பத்தி செய்யும் (பதிப்பாசிரியர்கள் மற்றும் புத்தகங்களை வெளியிடுபவர்கள்) வெளிப்படையான ஊழியத்தைச் செய்வது (நிஜ நிறைவேறுதலான மெராரியர்கள்), *(3)* எழுத்துப் படைப்புகள், பிரசங்கங்கள், உரையாடல்கள் ஆகியவற்றின் மூலம் ஜனங்களை நியாயமாகுதலுக்கும் பிரதிஷ்டைக்கும் கொண்டு வருவது (நிஜ நிறைவேறுதலான கெர்சோனியர்கள்).

*22.* இந்த மூன்று லேவி வகுப்பார்கள் மேலும் எட்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். இந்த எட்டு பிரிவுகளும், மேலே குறிப்பிடப்பட்ட நியாயமாக்கப்பட்டவர்களின் மூன்று வகுப்புகளிலுள்ள எட்டு பிரிவுகளுக்கு இணக்கமாயிருக்கின்றன. கோகாத்தியர்கள் அம்ராமியர்கள் (மோசேயின் மூலம் வந்த லேவியர்கள்), இத்சேயார், எப்ரோனியர், ஊசியேலியர் என்ற நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் ஆசாரியர்களுக்கும் ஜனங்களுக்கும் நான்கு வகையான அறிவு ரீதியான படைப்புகளின் மூலம் உதவியளித்த நியாயமாக்கப்பட்ட அறிஞர்களுக்கு *(scholars)* இணையாயிருக்கிறார்கள். அந்த நான்கு வகையான அறிவு ரீதியான படைப்புகளாவன: *(1)* மொழியியல் சார்ந்த *(linguistic)* படைப்புகள், *(2)* பொருள் விளக்கம் சார்ந்த *(interpretational)* படைப்புகள், *(3)* சரித்திர ரீதியான *(historical)* படைப்புகள், *(4)* கோட்பாடுகளை ஒழுங்கு முறைப்படுத்தும் *(systematic)* படைப்புகள்.

*23.* மெராரியர்கள் மகேலியர் மற்றும் மூசியர் என்ற இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களில் இவர்கள் *(1)* கோகாத்தியர்களின் கல்வி ரீதியான படைப்புகளையும் பயனுள்ள சில மதசார்பற்ற படைப்புகளையும் வெளியிடுபவர்கள் என்ற அலுவலிலுள்ள நியாயமாக்கப்பட்டவர்கள் மற்றும், *(2)* அவைகளை ஏற்ற முறையில் தயார் செய்யும் பதிப்பாசிரியர்கள் ஆகியவர்களை அடையாளப்படுத்துகிறார்கள். கெர்சோனியர்கள் லிப்னீயர்கள் மற்றும் சீமேயியர் என்னும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலில், *(1)* பாவிகளை நியாயமாக்கப்பட்ட நிலைக்கும், *(2)* நியாயமாக்கப்பட்ட சிலரைப் பிரதிஷ்டைக்கும் கொண்டு வர ஊழியஞ் செய்த நியாயமாக்கப்பட்டவர்களை அடையாளப்படுத்துகிறார்கள்.

*24.* யாத்திராகமம், எண்ணாகமம் மற்றும் *1* நாளாகமம் புத்தகங்களில் கொடுக்கப்பட்ட வம்ச வரலாறுபடி லேவியர்களில் அறுபது வகுப்புகள் இருந்தன. சுவிசேஷ யுகத்தில் அவர்கள் அறுபது வகையான வெவ்வேறு ஊழியங்களில் ஈடுபடுகிற நியாயமாக்கப்பட்டவர்களின் அறுபது வகுப்புகளை அடையாளப்படுத்துகிறார்கள். இவர்கள் பிராகாரத்தின் தொங்குதிரைகளை தூக்கிப் பிடிக்கும் அறுபது பிராகார தூண்களாலும் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். இந்த அறுபது வகுப்பார்கள் எவ்வாறு விசுவாசிகளுக்கு முன்பாகவும் உலகத்தாருக்கு முன்பாகவும் கிறிஸ்துவின் நீதியை தூக்கிப் பிடிக்கிறார்கள் என்பதை இது அடையாளப்படுத்துகிறது.

*25.* இவைகள் மட்டுமல்ல, மாம்ச இஸ்ரயேலர்கள் எகிப்திலிருந்தபோது பார்வோனின் அதிகாரத்

தின் கீழுள்ள ஆளோட்டிகளின்கீழ் அடிமைத்தனத்தில் இருந்தார்கள். ஆனால் அவர்களை விடுவிப்பதற்குத் தேவன் மோசே என்னும் இரட்சகரை எழுப்பினார். ஆரோன் மோசேக்கு உதவி செய்பவராக இருந்தார். அதுபோலவே ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் சாத்தானின் அதிகாரத்தின் கீழுள்ள பாவம், தப்பறை மற்றும் மரணம் என்னும் ஆளோட்டிகளின் கீழ் இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகத்தின் அடிமைத்தனத்திலிருந்தார்கள். ஆனால் தேவன் அவர்களை விடுவிப்பதற்குக் கிறிஸ்துவை இரட்சகராக எழுப்பினார். கிறிஸ்துவின் பூமிக்குரிய அனுபவங்கள் மோசே எகிப்தில் வாழ்ந்த நாற்பது வருடங்களில் அவருக்கிருந்த அனுபவங்களின் மூலம் அடையாளப்படுத்தப்படுகின்றன. மோசே எகிப்திற்குத் திரும்ப வருவதின் பெரும்பகுதி கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை அடையாளப்படுத்துகிறது. மோசேயின் வாயாகச் செயல்பட்ட ஆரோன் இரண்டாம் திரையின் இப்பக்கத்தில் (பூமியில்) உள்ள கிறிஸ்து வகுப்பாரை அடையாளப்படுத்துகிறார். அவர்களுடைய விடுதலையின் ஆயத்தமாக, அவர்கள் இரண்டாம் திரைக்கு அப்பால், காணக் கூடாத நிலையிலுள்ள கிறிஸ்து வகுப்பாரின் வாயாகச் செயல்பட்டார்கள். எகிப்தின் பத்து வாதைகள் வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் சொல்லப்பட்ட கடைசி ஏழு வாதைகளையும் மூன்று ஆபத்துகளையும் அடையாளப்படுத்துகின்றன. எகிப்தில் பஸ்கா ஆட்டுக்குட்டி நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்துவை அடையாளப்படுத்துகிறது. ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு, புசிக்கப்பட்ட அன்று ராத்திரி சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்துகிறது. இஸ்ரயேலின் மற்றும் எகிப்தின் மனுஷ முதற் பிறப்புகள் அந்த வகுப்பார்களின் புது சிருஷ்டிகளையும், மிருகத்தின் முதற் பிறப்புகள் அந்த வகுப்பார்களின் மனுஷீகத்தையும் அடையாளப்படுத்துகின்றன. நிஜ நிறைவேறுதலான இஸ்ரயேலின் முதற் பிறப்புகள் இரண்டாம் மரணத்திலிருந்து இரட்சிக்கப்பட்டார்கள், நிஜ நிறைவேறுதலான எகிப்திய முதற் பிறப்புகள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்பட்டார்கள். இஸ்ரயேலின் முதற் பிறப்புகளும் பிற்பிறப்புகளும் பஸ்கா ஆட்டுக்குட்டியில் பங்கு கொள்வதென்பது, பிரதிஷ்டை செய்தவர்கள் மற்றும் நியாயமாக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் பலி புண்ணியத்தில் மகிழ்ச்சியுடன் பங்கு கொள்வதை அடையாளப்படுத்துகிறது. இஸ்ரயேலின் விடுதலை என்பது, கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறவர்கள் பாவம், தப்பறை, ஆதாமினால் வந்த மரணம், சாத்தானின் வல்லமை ஆகியவற்றிலிருந்து விடுவிக்கப்படுவதை அடையாளப்படுத்துகிறது.

## *மற்ற முக்கியமான நிரூபணங்கள்*

*26.* சிவந்த சமுத்திரத்திலிருந்து சீனாய் மலைவரை மாம்ச இஸ்ரயேலர்கள் செய்த பிரயாணமானது பெந்தெகொஸ்தேயிலிருந்து ராஜ்யம்வரை ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் செய்த பிரயாணத்தை அடையாளப்படுத்துகிறது. சீனாய் மலையண்டையில் ஆசரிப்புக் கூடாரம், அதின் பாத்திரங்கள் மற்றும் பணிமுட்டுகள் தயார் செய்யப்படுவதென்பது, சுவிசேஷ யுகம் முழுவதும் கிரியை செய்த அடையாளங்களின் மற்றொரு தொகுப்பைத் தொடங்கி வைக்கிறது. இவைகள் மனுஷ கைவேலையாக இல்லாத சபையையும் அதின் போதனைகளையும் அதின் அம்சங்களையும் அபிவிருத்தி செய்வதில் யெஷுஆ மற்றும் சபை செய்த ஊழியங்களை அடையாளப்படுத்துகின்றன.

*27.* மாம்ச இஸ்ரயேலர்களில் நசரேயர்கள் இருந்தார்கள். அவர்கள் விசேஷித்த பொருத்தனைகளினால் கட்டப்பட்டிருந்தார்கள். அதுபோலவே ஆவிக்குரிய இஸ்ரயேலர்களிலும் விசேஷமாகப் பிரதிஷ்டை செய்த நபர்களாகிய சத்திய ஊழியக்காரர்கள் இருந்தார்கள். இஸ்ரயேலைச் சேர்ந்த ஆண் நசரேயர்கள் ஏழு நட்சத்திரங்களால் அடையாளப்படுத்தப்பட்ட சத்திய ஊழியக்காரர்களை அடையாளப்படுத்துகிறார்கள். பெண் நசரேயர்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலின் மற்ற சத்திய ஊழியக்காரர்களை அடையாளப்படுத்துகிறார்கள்.

*28.* மாம்ச இஸ்ரயேலின் பன்னிரண்டு பிரபுக்கள், வண்டிகளையும், மாடுகளையும், தாளங்களையும், கலசங்களையும், தூப கரண்டிகளையும் கொண்டு வந்தார்கள். அதுபோலவே ஆவிக்குரிய இஸ்ரயேலின் பன்னிரண்டு மதப்பிரிவுகளின் கிரீடத்தை இழந்த தலைவர்கள், நான்கு வகையான புத்தகங்களை வெளியிடும் ஸ்தாபனங்களை - யும், இரண்டு வகையான சமய பரப்பாள மற்றும் சமய அறிவுரை வழங்கும் ஸ்தாபனங்களையும் (மொத்தம் 6 வண்டிகள்), அந்த ஸ்தாபனங்களின் அதிகார பத்திரங்களையும் பிரமாணங்களையும் (மாடுகள்), அவர்களுடைய மதப்பிரிவுகளின் உக்கிராணத்துவ கோட்பாடுகளுக்குரிய சீர்த்திருத்தம் (தாளங்கள்), தப்பறையை நிராகரிக்கும் (கலசங்கள்) மற்றும் ஒழுக்கம் சார்ந்த (தூப கரண்டிகள்) போதனைகளையும் கொண்டு வந்தார்கள். இஸ்ரயேலின் ஆசாரியர்கள் மற்றும் லேவியர்கள் விசேஷித்த பணிவிடைகளின் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டதைப் போலவே (லேவி. 8; எண். 8) ஆவிக்குரிய இஸ்ரயேலின் ஆசாரியர்களும் லேவியர்களும் விசேஷமாகப் பிரத்யேகப்படுத்தப்பட்டிருந்தார்கள். ஆசாரிய வகுப்பார் பலி செய்வதற்காகவும் லேவி வகுப்பார் நீதிக்கு ஊழியஞ் செய்வதற்காகவும் பிரத்தியேகப்படுத்தப்பட்டிருந்தார்கள்.

*29.* மாம்ச இஸ்ரயேலர்கள் எகிப்தில் அடிக்கப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியின் வருடாந்தர ஞாபகார்த்தத்தை யூத யுகம் முழுவதும் அனுசரித்தார்கள். அதுபோலவே ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் வருடாந்தர ஞாபகார்த்தத்தைச் சுவிசேஷ யுகம் முழுவதும் அனுசரித்தார்கள். பகலில் மேகம் மேலே எழும்பும்போது இஸ்ரயேலர்கள் பிரயாணம் பண்ணப் புறப்பட்டார்கள், மேகம் எழும்பாதிருக்கும்போது பாளயமிறங்கினார்கள். அதுபோலவே அறுவடை காலங்களில் (பகல்) சத்தியத்தின் வழி நடத்துதலுக்கிணக்கமாக ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் குணநலன், அறிவு மற்றும் ஊழியத்தில் முன்னேறினார்கள் அல்லது சோதனைகளில் நிலைத்து நின்றார்கள். இரவில் பிரயாணம் செய்வது அல்லது பாளயமிறங்குவது என்பது அக்கினி ஸ்தம்பம் எழும்புவதை அல்லது எழும்பாதிருப்பதைச் சார்ந்திருந்தது. அதுபோலவே இரு அறுவடைகளுக்கு இடைப்பட்ட காலத்திலும் எபிப்பெனி காலத்திலும் (இரவு) சத்தியத்தின் வழி நடத்துதலுக்கு இணக்கமாக ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் குணநலன், அறிவு மற்றும் ஊழியத்தில் முன்னேறினார்கள் அல்லது சோதனையில் நிலைத்து நின்றார்கள். பன்னிரண்டு கோத்திரங்கள் நான்கு வகுப்புகளாக அல் - லது பாளயங்களாகப் பாளயமிறங்கினார்கள். அல்லது பிரயாணம் பண்ணினார்கள். அதுபோலவே சுவிசேஷ யுகத்தில் பன்னிரண்டு மதப்பிரிவுகள் நான்கு பாளயங்களில் பாளயமிறங்கினார்கள் அல்லது பிரயாணம் பண்ணினார்கள். வல்லமை, ஞானம், நீதி மற்றும் அன்பென்ற இயல்புகள் சம்பந்தமாக அவர்கள் கொண்டி

ருந்த கருத்துகள், அவர்கள் முன்னேறுவதின் மற்றும் நிலைத்து நிற்பதின் வரிசையைத் தீர்மானித்தன.

*30.* மாம்ச இஸ்ரயேலர்களைக் கூடிவரச் செய்வ தற்கும் பிரயாணம் பண்ண செய்வதற்கும் இரண்டு பூரிகை கள் இருந்தன. அதுபோலவே ஆவிக்குரிய இஸ்ரயே லுக்கும் பரம அழைப்பு மற்றும் இழந்ததைத் திரும்பக் கொடுத்தல் என்னும் இரு பெரிய செய்திகள் இருந்தன. அவைகள் கர்த்தருடைய கட்டளையின்படி விசேஷமான அல்லது பொதுவான சோதனையின் காலங்களிலும், முன்னேற்றத்தின் காலங்களிலும் வெவ்வேறாக உபயோ கிக்கப்பட்டன. மாம்ச இஸ்ரயேலில் பன்னிரண்டு வேவுக் காரர்கள் இருந்தார்கள். அதுபோலவே ஆவிக்குரிய இஸ்ரயேலிலும் ஆவிக்குரிய தேசத்தைச் சுற்றி பார்ப் பதற்குப் பன்னிரண்டு வகுப்புகள் இருந்தன. ஒவ்வொரு மதப்பிரிவுக்கும் ஒரு வகுப்பு இருந்தது. அவர்கள் சத்தியத்தையும், சத்தியத்தின் ஆவியையும், சபை மற்றும் உலகத்திற்குரிய நம்பிக்கை சம்பந்தப்பட்ட வெகுமதி களையும் கண்டு கொள்ள ஆவிக்குரிய தேசத்தைச் சுற்றி பார்த்தார்கள். பொல்லாத வேவுக்காரர்கள் தேசத்தைக் குறித்து துர்ச்செய்தி பரப்பச்செய்ததைப் போல், கிறிஸ்து மற்றும் சபையைத் தவிர மற்ற அனைவரும் உண்மையான சத்தியம், அதின் ஆவி, சபையின் நம்பிக்கை மற்றும் உலகத்தாரின் நம்பிக்கை ஆகியவற்றைக் குறித்துத் தவறான செய்தியைப் பரப்பினார்கள்.

*31.* இது யூத யுக அறுவடை காலத்தில் மாம்ச இஸ்ரயேலர்களிலிருந்து வந்த சகோதரர்களின் மத்தியில் நடைபெற்றது. மாம்ச இஸ்ரயேலர்களின் பன்னிரண்டு கோத்திரங்களிலிருந்தும் சபை வகுப்பார் வந்திருப்பார் கள். அவர்களில் சிலர் பிற்காலத்தில் நிஜ நிறைவேறு தலான வேவுக்காரர்களானார்கள். சுவிசேஷ யுக அறு வடை காலத்திலும் கிறிஸ்தவ மண்டலத்தின் பன்னிரண்டு மதப்பிரிவுகளிலிருந்து சபைக்கான நிஜ நிறைவேறு தலான வேவுக்காரர்கள் வந்தார்கள். ஒவ்வொரு அறுவடையிலும் நடந்த ஐந்து கொழித்தல்களினால் உண்டான வாதைகளினால் பொல்லாத வேவுக்காரர்கள் தாழ்த்தப்பட்டிருந்தார்கள். யூத யுக அறுவடைக்குப் பிறகு ஜனங்கள் சுவிசேஷ யுகத்தில் உருவகமான வனாந் தரத்தில் அலைந்து திரியும்படி அனுப்பப்பட்டிருந்தார்கள். பரூஷியா காலத்தின் முடிவிலும் அவ்வாறே உருவகமான வனாந்திரத்திற்குத் திரும்ப அனுப்பப்பட்டிருந்தார்கள். இவ்வாறு அலைந்து திரிவது எபிப்பெனி காலத்தின் இறுதியில் முடிவுக்கு வரும். எபிப்பெனி காலமானது ஒரு சிறிய அளவில் சுவிசேஷ யுகத்தின் இணையாக இருக் கிறது. யெஷுஆ மற்றும் விசுவாச உண்மைத்துவமுள்ள சபை மட்டுமே எவ்வித தீங்கும் நேரிடாமல் இந்த அனுபவங்களிலிருந்து வெளியேறினார்கள். யோசுவா கர்த்தராகிய யெஷுஆவையும் காலேப் விசுவாச உண்மைத்துவமுள்ள சபை வகுப்பாரையும் அடையாளப் படுத்துகிறார்கள். மற்ற அனைவரும் பரம அழைப்பை இழந்து விட்டார்கள். சிலர் திரள் கூட்டத்தாரானார்கள். சிலர் இரண்டாம் மரணத்திற்குள் சென்றார்கள்.

*32.* மேரிபாவின் தண்ணீர்களண்டையில் இஸ்ர - யேலர்களுக்குச் சில அனுபவங்கள் இருந்தன. அங்கே கர்த்தரைப் பரிசுத்தம் பண்ண தவறின இஸ்ரயேலின் தலைவர்களை அவர்கள் இழந்தார்கள். அதுபோலவே ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும் நிஜ நிறைவேறுதலான மேரிபாவின் தண்ணீர்களாகிய மீட்கும் பலி மற்றும் பாவ நிவாரண பலி பற்றிய போதனைகள் சம்பந்தமாகச் சில அனுபவங்கள் இருந்தன. அவ்வித அனுபவங்களில் கர்த்தரைப் பரிசுத்தம் பண்ண மறுத்த தலைவர்களைச் சபை இழப்பது மட்டுமல்ல, அந்த தலைவர்கள் சத்தியம், அதின் ஆவி மற்றும் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை என்னும் நிஜ நிறைவேறுதலான கானானுக்குள் பிரவே - சிக்க மாட்டார்கள்.

*33.* மாம்ச இஸ்ரயேலில் தேவன்மேல் பயபக்தி இல்லாமல் பேசி, தேவ தூஷணம் பண்ணினவர்கள் இருந்தார்கள். அவர்கள் பாளயத்திற்குப் புறம்பே கல்லெறியப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். அது போலவே ஆவிக்குரிய இஸ்ரயேலிலும் தேவனுடைய குணாம்சம், திட்டம், கிரியைகள் ஆகியவைகள் சம்பந்த மாகத் தேவதூஷணம் பண்ணின கள்ள போதகர்கள் இருந்தார்கள். விசுவாச உண்மைத்துவமுள்ளவர்கள் சத்தியமென்னும் கற்களை அவர்கள்மேல் எறிவதினால் அவர்கள் தேவனுடைய ஜனங்களில் இராதபடிக்கு உருவகமாகக் கல்லெறியப்பட்டுக் கொல்லப்பட்டார்கள்.

*34.* மாம்ச இஸ்ரயேலர்களிடம் மாம்சத்திற்குரிய தெரிந்து கொள்ளப்பட்ட ஆசாரியக் கூட்டம் இருந்தது. அவர்களைத் தவிர மற்ற எவர்களும், ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்த பணிமுட்டுகள் மற்றும் பலி பீடங் கள் மூடப்படாதிருக்கும்போது, அவைகளை அணுகக் கூடாததாக இருந்தது. அவ்வாறு செய்தால் அவர்களுக்கு மரணம் நேரிடும். அது போலவே ஆவிக்குரிய இஸ்ரயே லர்களுக்கும் ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்ட ஆசாரிய கூட்டம் இருந்தது. அந்த வகுப்பாரைத் தவிர மற்ற எவர்களும் மூடப்படாத நிஜ நிறைவேறுதலான பணி முட்டுகளையும் பலி பீடங்களையும் அணுகக் கூடாத தாக இருந்தது. அவ்வாறு செய்தால் அவர்களும் அவர் களுடைய நிலையை இழப்பார்கள்.

*35.* மாம்ச இஸ்ரயேலர்கள் கானானை நோக்கிச் செய்த பிரயாணத்திற்கு இடையூறாயிருந்த மாம்சத்திற் குரிய சத்துருக்கள் இருந்தார்கள். அதுபோலவே ஆவிக் குரிய இஸ்ரயேலர்கள் பரத்துக்குரிய கானானை நோக்கிச் செய்யும் பிரயாணத்திற்கு இடையூறாயிருக்கிற ஆவிக் குரிய சத்துருக்கள் இருந்தார்கள். மாம்ச இஸ்ரயேலர்கள் சமாதானத்துடன் ஏதோம் வழியாகச் செல்ல அனுமதிக் கப்படாமல், ஏதோமைச் சுற்றிச் செல்ல வேண்டியதாக இருந்ததைப் போல், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் பேர் சபை அமைப்பின் வழியாகச் சமாதானத்துடன் செல்ல அனுமதிக்கப்படாததால், அவர்கள் அதைச் சுற்றி கடின மான ஆவிக்குரிய பிரயாணம் செய்ய வேண்டியதா யிருந்தது.

*36.* பாலாக் மாம்ச இஸ்ரயேலர்களை அழிக்க வகை தேடினான். அதை நிறைவேற்றுவதற்கு இஸ்ரயே லர்களின் மேல் தெய்வீக சாபத்தைக் கொண்டு வருவதற் குப் பிலேயாமை நாடினான். அதுபோலவே சுவிசேஷ யுகம் முழுவதும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை அழிப் பதற்குச் சாத்தானானவன், பணத்தின்மேலும் கனத்தின் மேலும் பேராசையுள்ள போதகர்களாகிய நிஜ நிறை வேறுதலான பிலேயாமை நாடினான். பாலாக்கின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, பிலேயாமை தன் பட்சத்தில் கொண்டு வருவதற்கு, பாலாக் செய்த முதல் முயற்சி தோல்வியுற்றது. அது போலவே யூத யுக அறுவடை காலத்தில், அக்கிரமத்தின் ரகசியத்தின் ஆரம்ப கிரியைகளில் ஈடுபட்ட, பேராசையுள்ள, கனத்தை அபகரிக்க நாடின போதகர்களின் முதல் கூட்டத்தை, தன்னுடைய நோக்கங்களை நிறைவேற்றும்படி தன் பட்சத்தில் கொண்டு வருவதில், சாத்தான் தோல்வி யடைந்தான். பாலாக் இன்னும் அதிகமான மற்றும் பெரிதான வாக்குறுதிகளைக் கொடுத்து, பிலேயாமை வரத்தூண்டினான். அதுபோலவே, சபையின் சிமிர்னா

காலகட்டத்தில் (கிபி 70-313), சாத்தான் இந்த போதகர்களுக்கு இன்னும் அதிகமான மற்றும் பெரிதான வாக்குறுதிகளைக் கொடுப்பதின் மூலம், அவனுக்கு உதவ அவர்களை அவனிடம் வரும்படி செய்தான். உருவின பட்டயத்தை தம்முடைய கையிலே பிடித்துக் கொண்ட கர்த்தருடைய தூதனானவர் மூன்று முறை பிலேயாமை எதிர்த்து நின்றார். அதுபோலவே (1) கோட்பாடு, (2) அமைப்பு மற்றும் (3) நடைமுறை சம்பந்தப்பட்ட சத்திய போதனைகளைக் கொண்டு, சிமிர்னா சபையின் நட்சத்திர அங்கத்தினர்களாயிருந்த பல்வேறு போதகர்கள் சிமிர்னா கால கட்டத்தில் இவ்வாறு பேராசையுடன் கனத்தை அபகரிக்க நாடின போதகர்களை எதிர்த்தார்கள்.

37. பாலாக்கிடம் செல்வதற்குப் பிலேயாம் செய்த பிரயாணத்தில், அவனுக்கு எதிராக உருவப்பட்ட பட்டயத்தைத் தவிர்க்க, பிலேயாமின் கழுதை மூன்று முறை முயற்சி செய்தது, ஆனால் ஒவ்வொரு முறையும் பிலேயாமினால் அடிக்கப்பட்டது. அது போலவே சபையின் சிமிர்னா கால கட்டத்தில் பேராசையுடன் கனத்தை அபகரிக்க நாடின போதகர்கள், அவர்களுடைய போதிக்கும் அலுவலில் (நிஜ நிறைவேறுதலான கழுதை), சத்திய போதகர்களின் (கர்த்தருடய தூதன்) மூலம் கொடுக்கப்படுகிற சத்தியத்தின் தப்பறைகளை எதிர்க்கும் வல்லமையைத் (பட்டயம்) தவிர்க்க நாடினபோது, அந்த போதகர்கள் மூன்று முறை (மேலே சொல்லப்பட்ட மூன்று அம்சங்கள் ஒவ்வொன்றிலும் ஒருமுறை) போதகர்களாக அவர்களுடைய அலுவல்களுக்குத் தீங்கு விளைவித்துக் கொண்டார்கள். பிலேயாம் இவ்வாறு மூர்க்கமாகச் செயல்படும் போது அவனுடைய கழுதையினால் கடிந்து கொள்ளப்பட்டான். அதுபோலவே போதகர்களாக நிஜ நிறைவேறுதலான பிலேயாமிற்கு இருந்த அலுவல் (கழுதை) அவர்களுடைய போக்கின் தவறான தன்மையைச் சுட்டிக்காட்டி அவர்களைக் கடிந்து கொண்டது. அடையாளத்தில் பிலேயாமுடன் வேலைக்காரர் இரண்டு பேர் இருந்தார்கள். அதுபோலவே சபையின் சிமிர்னா காலக்கட்டத்தில், நிஜ நிறைவேறுதலான பிலேயாமுடன், மதப்பிரிவு பற்றுடைய கிரேக்க மற்றும் ரோமன் கத்தோலிக்கர்கள் இருந்தார்கள்.

38. பிலேயாம் மோவாபிற்கு வந்த பிறகு, மூன்று இடங்களிலிருந்து இஸ்ரயேலர்களைச் சபிக்க நாடினான். அதுபோலவே சபையின் பெர்கமு கால கட்டத்தில், பேராசையுடன் கனத்தை அபகரிக்க நாடின போதகர்கள், (1) மதகுருமார் கொள்கை (clericalism) (பாகாலுடைய மேடுகள்), (2) போதகர் சம்பந்தப்பட்ட கொள்கைகள் (prophetism) (பிஸ்காவின் கொடுமுடியிலிருக்கிற சோப்பீமின் வெளி), (3) சபையும் அரசாங்கமும் இணைந்திருப்பது சம்பந்தப்பட்ட கொள்கைகள் (பேயோரின் கொடுமுடி) என்ற மூன்று நிலைகளிலிருந்து ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்குத் தீங்கு விளைவிக்க நாடினார்கள்.

39. பிலேயாம் கொடுத்த ஆலோசனையின்படி, பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்கள் பாகால்பேயோரின் பாவத்தில் ஈடுபடும்படி பாலாக் அவர்களைத் தூண்டினான். அதுபோலவே தியத்தீரா சபை காலத்தில், பேராசையுடன் கனத்தை அபகரிக்க நாடின போதகர்களின் செயல்களினால், பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் கலப்படச் சேர்க்கை என்னும் பாவத்தில் ஈடுபடும்படி, சாத்தான் அவர்களைத் தூண்டினான் (அறுவடை காலங்களின் மூன்றாம் கொழித்தலிலும், சுவிசேஷ யுகத்தின் மூன்றாம் கொழித்தலிலும் அந்த கொழித்தலை உண்டு பண்ணின மூன்றாம் கருவி கலப்படச் சேர்க்கையாக இருந்தது). அடையாளத்தில் இதைத் தொடர்ந்து ஒரு வாதை வந்தது. அதில் 24,000 பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்கள் மரித்தார்கள். பினெகாஸின் நியாயமான செயல்மூலம் அந்த வாதை நிறுத்தப்பட்டது. அதுபோலவே நிஜ நிறைவேறுதலில் தப்பறையின் ஒரு கொள்ளை நோய் உண்டானது. ரோம கத்தோலிக்க படி நிலை அமைப்பு மற்றும் உலக ரீதியான கொள்கைகள் ஆகியவைகளுக்கிடையிலுள்ள கூட்டுறவில் வெளிப்படுத்தப்பட்ட கலப்படச் சேர்க்கை என்னும் தப்பறையைப் பகிரங்கமாக மறுத்த பிரஸ்கியா ஊரைச் சேர்ந்த அர்னால்டு (Arnold of Brescia) என்ற நட்சத்திர அங்கத்தினர் மூலம் (அவர் கி.பி. 1155-ம் ஆண்டில் மரித்தார்) அந்த கொள்ளை நோய் நிறுத்தப்பட்டது.

40. இறுதியாக இஸ்ரயேலுடைய எல்லா கோத்திரங்களிலும் ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் தெரிந்து கொள்ளப்பட்ட ஆயிரம் பேர் மீதியானுக்கு விரோதமாக வெற்றிகரமாக யுத்தத்தைச் செய்தார்கள். அந்த யுத்தத்தில் இஸ்ரயேலர்கள் பல கொள்ளை பொருளைப் பெற்றுக் கொண்டார்கள். அந்த யுத்தத்திலேயே பிலேயாம் கொல்லப்பட்டான். அதுபோலவே சுவிசேஷ யுக அறுவடை காலத்தில், கிறிஸ்தவ மண்டலத்தின் பன்னிரண்டு மதப்பிரிவுகள் ஒவ்வொன்றிலிருந்தும் வந்த, நிஜ நிறைவேறுதலான ஆயிரம் போர் வீரர்கள் சத்தியத்திற்குள் வந்து, தப்பறையாளர்களுக்கு எதிராகப் போர் செய்தார்கள். பேராசையுடன் கனத்தை அபகரிக்க நாடின போதகர்கள், அந்த யுத்தத்தில், ஆவியின் பட்டயத்தினால் முடிவாகவும் முழுமையாகவும் நிராகரிக்கப்பட்டார்கள். அதின் விளைவாக அவர்கள் சத்தியத்தின் பெரிய கொள்ளை பொருளையும், அறுவடை காலத்தில் உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலுக்குள் வருகிற பல நபர்களையும் ஆதாயப்படுத்திக் கொண்டார்கள். மீதியானியரின் ஆண்களையும், கன்னிகைகளாக இல்லாத பெண்களையும் கொலை செய்தார்கள். இது 1878-ல் தொடங்கி, புரட்சி என்ற கொழித்தல் முடிவடையும் வரையுள்ள காலத்தில், சிறுமந்தை வகுப்பாரிடமிருந்து இரண்டாம் மரணக்காரர்களும் திரள் கூட்டத்தாரும் பிரிக்கப்படுவதை அடையாளப்படுத்துகிறது. இங்கே நாம் நீண்ட ஒரு அடையாளத்தைப் பார்த்தோம். அதின் நிஜ நிறைவேறுதலும் யூத யுக அறுவடையின் ஆரம்பத்தில் தொடங்கி எபிப்பெனி காலம் வரை நீடித்த முழு சுவிசேஷ யுகத்திலும் நிகழ்ந்தது.

41. இதுவரை நாம் ஆதியாகமத்தில் யாக்கோபின் மரணம் முதற் கொண்டு எண்ணாகமம் புத்தகத்தின் முடிவு வரை இஸ்ரயேல் தேசம் சம்பந்தப்பட்ட முக்கியமான அடையாளங்களைச் சுருக்கமாகக் கருத்தில் கொண்டோம். பழைய ஏற்பாடு முழுவதையும் கருத்தில் கொண்டு, அடையாளம் மற்றும் நிஜ நிறைவேறுதலின் கண்ணோட்டத்திலிருந்து இரு இஸ்ரயேலர்களைப் பற்றிய காரியங்களை விளக்குவதற்குக் காலம் போதாது. பழைய ஏற்பாடு முழுவதிலும் இவைகள் நிறைந்திருக்கின்றன. யோசுவா மற்றும் அவருடைய போர் வீரர்கள் கானானைச் சுதந்தரித்துக் கொண்டு, தேசத்தைப் பங்கிடுவதின் மூலம் ஆவிக்குரிய இஸ்ரயேலின் பல்வேறு காலகட்டங்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன. எல்லா நியாயாதிபதிகளும் அவர்களோடு இருந்தவர்களின் மூலமும், இஸ்ரயேல் மற்றும் யூதாவின் ராஜாக்கள், தீர்க்கதரிசிகள் முதலியவர்களின் மூலமும் மற்ற பல காரியங்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன.

42. இப்போது நாம் இஸ்ரயேல் மற்றும் பாபிலோனுக்கிடையிலுள்ள அடையாளமான பந்தத் தைக் கருத்தில் கொள்வோம். உண்மையான மாம்ச இஸ்ர -

யேலர்கள் ஆதரவற்ற சிறைக்கைதிகளாகப் பாபிலோனுக்குக் கொண்டு போகப்பட்டார்கள். அங்கே அவர்களுடைய பரிசுத்த பணிமுட்டுகள் முறைக்கேடாகக் கையா - ளப்பட்டன. அதுபோலவே உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் முழுமையான ஒருமைப்பாடுடைய ஒரே ஜனமாக இருக்கும் நிலையிலிருந்து நீக்கப்பட்டு, உருவகமான பாபிலோனாகிய பேர் சபையின் படிநிலை அமைப்பின்கீழ் ஆதரவற்ற சிறைக்கைதிகளாக ஆக்கப்பட்டார்கள். அங்கே அவர்களுடைய சத்திய போதனைகள் முறைக்கேடாகக் கையாளப்பட்டது.

*43.* ஆனால் பாபிலோன் கோரேஸ் ராஜாவால் கவிழ்க்கப்பட்டது. அவன் ஐபிராத்து நதியின் தண்ணீர்களைத் திசை திருப்பி, அதன் கால்வாயின் மூலம் அவனுடைய போர்வீரர்கள் நகரத்திற்குள் பிரவேசிக்கும் வழியைக் கண்டு கொண்டான். அது போலவே சுவிசேஷ யுக அறுவடையில் கர்த்தராகிய யெஷுஆ உருவகமான பாபிலோனிலிருந்து ஜனங்களின் ஆதரவைத் திசை திருப்பினார். அதன் மூலம் உருவகமான பாபிலோனை அழிக்கும்படி அவருடைய பெரிய சேனை முன்னேறுவதற்கான வழியைக் கண்டு கொண்டார். கோரேஸ் இஸ்ரயேலர்களை அவர்களுடைய தேசத்திற்கும் அவர்களுடைய ஆலயத்தைத் திரும்பக் கட்டுவதற்கும் திரும்ப அனுப்பினான். அதுபோலவே சுவிசேஷ யுக அறுவடை காலத்தில் கிறிஸ்து, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை அவர்களுடைய தேசமாகிய சத்தியம், அதின் ஆவி மற்றும் அதின் நம்பிக்கைகளின் செயல் எல்லைக்குத் திரும்பக் கொண்டு வந்தார். மேலும் அந்த காலத்தில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் பரிசுத்தமான சத்திய போதனைகளிலிருந்து பாபிலோனிய கறைகளை நீக்கி, அவைகளைச் சுத்திகரித்து, ஆலயமாகிய சபையை ஒருமைப்பாடுள்ள ஒரே ஜனமாகத் திரும்பக் கட்டினார்கள். மேலும் அந்த ஆலயத்தில் ஆசாரியர்கள் சத்திய போதனைகளைக் கொண்டு நிஜ நிறைவேறுதலான பலிகளைத் திரும்பச் செலுத்தினார்கள்.

## காலத்திற்குரிய அம்சங்களும் ஆவிக்குரிய இஸ்ரயேல் இருப்பதை நிரூபிக்கிறது

*44.* கால அம்சங்களின் இணைகளின் ஏழு வகையான தொகுப்புகள் இருக்கின்றன. ஒவ்வொரு தொகுப்பிலும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நிகழ்கிற பல இணையான சம்பவங்கள் இருக்கின்றன. இவைகளும் இரு பெயரளவிலான மற்றும் இரு உண்மையான இஸ்ரயேலர்கள் இருப்பதை நிரூபிக்கின்றன. ஒன்று மாம்சத்திற்குரியதாகவும் மற்றொன்று ஆவிக்குரியதாகவும் இருக்கிறது. ஏழு தொகுப்புகளில் இரு தொகுப்புகளை மட்டுமே நாம் இங்கே கருத்தில் கொள்வோம்: *(1) 1845* வருடங்களின் இணை, *(2) 2520* வருடங்களின் இணை. *1845* வருடங்களின் இணையை நாம் பொதுவாக “இணையான யுகங்கள்” *(Parallel Dispensations)* என்று அழைக்கிறோம். இது ஏசாயா, எரேமியா மற்றும் சகரியா தீர்க்கதரிசிகள் குறிப்பிடுகிற "இரட்டிப்பான" காலமாகும். *2520* வருட இணை மோசே மற்றும் தானியேலால் குறிப்பிடப்படுகிறது. கர்த்தராகிய யெஷுஆ அதைப் “புறஜாதியாரின் காலங்கள்” என்றழைக்கிறார். இந்த இணையின் மூலம்தான், பாஸ்டர் ரஸல் *1914*-ம் வருடத்தை, புறஜாதியாரின் காலங்களின் முடிவாகவும், உலக மகா யுத்தத்தின் மூலம் மகா உபத்திரவ காலத்தின் ஆரம்பமாகவும் முன்பே அறிவித்தார்.

*45.* நாம் முதலாவதாக *1845* வருட இணையைப் பற்றிய சில குறிப்புகளைப் பார்ப்போம். யூத யுகம் மற்றும் சுவிசேஷ யுகம் ஒவ்வொன்றும் *1845* வருட காலமாக இருந்தன. ஒவ்வொரு யுகத்தைத் தொடர்ந்து நாற்பது வருட அறுவடை காலமிருந்தது. யூத மற்றும் சுவிசேஷ யுகம் இணையான யுகங்களாக இருக்கின்றன. மாம்ச இஸ்ரயேலர்களின் தலைவராகிய யாக்கோபின் மரணமும், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் தலைவராகிய யெஷுஆவின் மரணமும் *1845* வருட கால இடைவெளியில் நிகழ்ந்தன. யாக்கோபு கி.மு. *1813* ஏப்ரல் மாதத்தில் மரித்தார், கர்த்தராகிய யெஷுஆ கி.பி. *33* ஏப்ரல் மாதத்தில் மரித்தார். செருபாபேல் கி.மு. *537* அக்டோபரில் இஸ்ரயேலைப் பாபிலோனிலிருந்து பாலஸ்தீனாவிற்குத் திரும்பக் கொண்டு வரத் தொடங்கினார். கி.பி. *1309* அக்டோபரில் மார்சிகிலியோ *(Marsiglio)* ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை அடையாளமான பாபிலோனிலிருந்து விடுவித்து, அவர்களைச் சத்தியம் அதின் ஆவி மற்றும் அதின் நம்பிக்கைகளின் செயல் எல்லைக்குள் கொண்டு வரத் தொடங்கினார். அர்தசஷ்டாவின் நிர்வாகஸ்தராக இருந்த எஸ்றா கி.மு. *468* அக்டோபரில் அவருடைய சீர்த்திருத்தும் வேலையைத் தொடங்கினார். கர்த்தராகிய யெஷுஆவின் நிர்வாகஸ்தராக இருந்த வைக்லிஃப் *(Wycliffe)* கி.பி. *1378*-ல் அவருடைய கோட்பாடு ரீதியான சீர்த்திருத்தும் வேலையைத் தொடங்கினார். திருப்பலி பூஜை *(The Mass)* மற்றும் அதில் உண்மை நிகழ்வாக நடக்கும் தன்மை மாற்றம் *(Transubstantiation)* என்ற தப்பறையை நீக்கி அவர் கர்த்தருடைய இராப் போஜனத்தில் அடங்கியுள்ள சரியான ஞாபகார்த்த கருத்தைக் கொடுத்தார். நெகேமியா கி.மு. *455*-ல் எருசலேமின் மதில்களைத் திரும்பக் கட்டத் தொடங்கினார். ஹஸ் *(Huss)* என்பவர் கி.பி. *1391*-ல் ஆவிக்குரிய எருசலேமின் மதில்களாயிருக்கிற பல்வேறு சத்தியங்களை முன் வைக்கத் தொடங்கினார்.

*46.* கர்த்தராகிய யெஷுஆவின் முதல் வருகை கி.பி. *29* அக்டோபரில் யோர்தானில் தொடங்கினது. இரண்டாம் வருகையானது *1874* அக்டோபரில் உலகமெங்கும் தொடங்கினது. பெயரளவிலான மாம்ச இஸ்ரயேல் கி.பி. *33* ஏப்ரல் மாதத்தில் புறக்கணிக்கப்பட்டது. அது முதல் உண்மையான மாம்ச இஸ்ரயேலர்கள் யூத மத அமைப்பை விட்டு வெளியே வர அழைக்கப்பட்டிருந்தார்கள். பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேல் *(பாபிலோன்) 1878* ஏப்ரல் மாதத்தில் புறக்கணிக்கப்பட்டது. அது முதல் உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் பேர் சபையை விட்டு வெளியே வர அழைக்கப்பட்டார்கள். கி.பி. *33* ஏப்ரல் மாதத்தில் யூதாஸ் காரியோத்து யெஷுஆவைக் காட்டிக் கொடுத்தான். அதினால் கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார். *1878* ஏப்ரல் மாதத்தில் பார்பர் என்பவர் ஈடுபலியை மறுதலித்தார். அது தேவனுடைய குமாரரை மறுபடியும் சிலுவையில் அறைவதற்கு ஒப்பாக இருந்தது.

*47.* இப்பொழுது நாம் இணையான கால கட்டங்களின் இரண்டாம் தொகுப்பைக் கருத்தில் கொள்வோம். அதின் கால அளவு *2520* வருடங்களாகும் என்று இது நிரூபிக்கும். இந்த இணையான கால கட்டங்களின் முதல் பாகம் ஆதாமின் வீழ்ச்சிக்கு *1000* வருடங்களுக்குப் பிறகு தொடங்கி கி.மு. *607*ல் ரிப்லா என்ற ஊரில் சிதேக்கியாவிடமிருந்து ராஜ்யபாரம் அகற்றப்படுவதுடன் முடிவுக்கு வந்தது (இந்த கால அளவு *2520* வருடங்களாகும்). இந்த கால கட்டத்திற்கு இணையான இரண்டாம் பாகத்தைக் கணக்கிடுவதற்கு, லேவி. *26:18,21,24*

*வசனங்களைக் கருத்தில்கொள்வோம். இங்கு தேவன் ஏழு கால தண்டனையைக் குறித்து, அதாவது 2520 வருடங்களைக் குறித்துச் சொல்கிறார். கி.மு. 607லிருந்து 2520 வருடங்களைக் கணக்கிடும் போது அது நம்மை 1914க்கு கொண்டு வருகிறது. 1914-ம் வருடமானது புறஜாதியாரின் காலங்களின் முடிவாகும்.*

*48. இந்த இரு காலங்களில் நிகழ்ந்த சில இணையான சம்பவங்கள் இவ்வாறாக இருக்கின்றன: சிதேக்கியாவிடமிருந்து ராஜ்யபாரம் அகற்றப்படுவதற்கு 393 வருடங்களுக்கு முன்பு, கி.மு. 1000 வருடத்தில், இஸ்ர -யேல் இரு ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டது. 1914க்கு 393 வருடங்களுக்கு முன்பு, கிபி.1521-ம் வருடத்தில் ரோமன் கத்தோலிக்க சபை கத்தோலிக்க மற்றும் புரடஸ்டன்ட் மதப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டார்கள். கி.பி. 1521-ல் வர்ம்ஸ் (Worms) என்ற இடத்தில் நடந்த சபை குழுவில் சபையும் அரசாங்கமும் சேர்ந்து லூத்தரை வெளிப்படை யாகப் புறக்கணித்த போது இது நிகழ்ந்தது. சிதேக்கியா விடமிருந்து ராஜ்யபாரம் அகற்றப்படுவதற்கு 125 வருடங் களுக்கு முன்பு, கி.மு. 732-ம் வருடத்தில் எசேக்கியாராஜா வியாதிப்பட்டு மரணத்திற்கேதுவாயிருந்தார். கிறிஸ்தவ மண்டலத்தின் ஏகாதிப்பத்திய ராஜரீகமானது 1789-ல் தொடங்கின பிரெஞ்சு புரட்சியில் வியாதிப்பட்டு மரணத் திற்கேதுவாயிருந்தது. 1789 என்பது 1914க்கு 125 வருடங் களுக்கு முன்னான காலமாகும்.*

*49. சிதேக்கியாவிடமிருந்து ராஜ்யபாரம் அகற்றப்படுவதற்கு 68 வருடங்களுக்கு முன்பு, கி.மு. 675-ம் வருடத்தில், மனாசேயின் மூலம் சீர்த்திருத்தம் நடந்தது (2 நாளா. 33:10-16). 1914 க்கு 68 வருடங்களுக்கு முன்பு 1846-ம் வருடத்தில் மிகவும் குறிப்பிடத்தக்கச் சீர்த்திருத் தலின் நிகழ்வாக வாசஸ்தலத்தின் சுத்திகரிப்பு நிகழ்ந்தது. சிதேக்கியாவிடமிருந்து ராஜ்யபாரம் அகற்றப்படுவதற்கு 45 வருடங்களுக்கு முன்பு, கி.மு. 652ல் யோசியா ராஜா கர்த்தரைத் தேடத் தொடங்கினார். 1914க்கு 45 வருடங் களுக்கு முன்பு, 1869ல் பாஸ்டர் ரஸல் சத்தியத்தின் மூலம் கர்த்தரைத் தேடத் தொடங்கினார். சிதேக்கியாவிட மிருந்து ராஜ்யபாரம் அகற்றப்படுவதற்கு 35 வருடங் களுக்கு முன்பு, கி.மு. 642-ல் யோசியா ராஜா புதிதாகக் கண்டெடுத்த நியாயப்பிரமாண புத்தகத்தை அறிவித்தார். 1914க்கு 35 வருடங்களுக்கு முன்பு, 1879-ல் பாஸ்டர் ரஸல் புதிதாகக் கண்டெடுத்த பரூஷியா சத்தியத்தை அறிவிக் கும் வழியாக வாட்ச் டவரை (காவல் கோபுர பத்திரிக்கை) வெளியிடத் தொடங்கினார்.*

*50. இந்த இணையான காலங்களின் முதல் பாகம், கி.மு. 607ல் ஏழாம் மாதத்தின் இரண்டாம் தேதியில் சிதேக்கியாவிடமிருந்து ராஜ்யபாரம் அகற்றப்படுவதுடன் முடிவுக்கு வந்தது. இந்த இணையின் இரண்டாம் பாகம் அதற்குச் சரியாக 2520 வருடங்களுக்குப் பிறகு, கிறிஸ்தவ மண்டலத்திடமிருந்து ராஜ்யபாரம் அகற்றப்படுவதுடன் முடிவுக்கு வந்தது. 1914-ல் யூத கால அட்டவனையின் ஏழாம் மாதத்தின் இரண்டாம் தேதியாகிய செப்டம்பர் 21 அன்று தொடங்கிய பதுங்கு குழியிலிருந்து செய்யப்பட்ட யுத்தத்தில் (trench warfare) உலக மகா யுத்தம் தொடங்கின துடன் இந்த காலம் முடிவுக்கு வந்தது. இந்த 2520 வருடங் களின் இணையான காலங்களில் மற்ற அநேக நிகழ்வு களும் குறிப்பிடப்படக் கூடும். ஆனால் மேலே குறிப்பிடப் பட்டவைகளே போதுமானவைகளென்று நாங்கள் எண்ணுகிறோம்.*

★★★★★★★★★★★★★★★★★★★★★

**நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்; அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார்.**

*ஆப. 3:18-19*

***உங்கள் கவனத்திற்கு***

சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது

## பெங்களூரு கன்வென்ஷன்

கர்த்தருக்குச் சித்தமானால்
*"மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தின்"*
சகோதர ஐக்கியக் கூட்டம் , பெங்களூரில்
ஆகஸ்ட் மாதம் 8,9,10 தேதிகளில்
(வெள்ளி, சனி, ஞாயிறு ) நடைபெறும்.
"தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்
விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை
இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்"


## புது உடன்படிக்கை

*Monthly newsletter published by the brethren of the Millennial Bible Truth Movement*
*Website: www.mbtm.in*